வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 04.03.2023 சனிக்கிழமை இதழ் : 85 பக்கங்கள் : 16






## தேர்தல் மூலம் மட்டுமே அரசை மாற்ற முடியும்!

### திருமலை விமானப்படைத் தளத்தில் வைத்து கூறினார் ஜனாதிபதி ரணில்



திருகோணமலை, மார்ச் 04

ஓர் அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகிறது அல்லது மாற்றப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தல் இல்லாமல் ஆட்சி மாற்றம் சாத்தியமில்லை. வீதிகள் (போராட்டம்) என்பது பாராளுமன்றத்திற்கான மாற்றுவழியல்ல - இவ்வாறு 15

## தேர்தலை பிற்போட அரசு முயற்சிக்கிறது

### பவ்ரல் அமைப்பு சாடல்

கொழும்பு, மார்ச் 04

உள்ளூராட்சி மன்ற தேர்தலை திகதி குறிப்பிடாமல் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசாங்கம் மிகவும் மோசமான முறையில் தலையிட்டு வருகிறது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான 15



## கச்சதீவு தேவாலய திருவிழா; 5,100 பக்தர்களே பங்கேற்பு!

கச்சதீவு, மார்ச் 04

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்தத் திருவிழாவில் இலங்கையிலிருந்து 2 ஆயிரத்து 800 பக்தர்களும் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட கடமை நிமித்தம் 200 பேரும், இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 100 பக்தர்களுமாக 5 ஆயிரத்து 100 பேர் பங்கேற்றனர்.

இராமேஸ்வரம் மறை மாவட்ட ஆயர் தேவ சகாயம் ஆண்டகை தலைமையில் கொடியேற்ற 15

# கச்சதீவில் பிக்குகள் குழு; பக்தர்களிடையே பரபரப்பு

கச்சதீவு, மார்ச் 04

**கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் நேற்றைய தினம் 10 பிக்குகள் கொண்ட குழு பங்கேற்றுள்ளது.**

**நேற்றைய தினம் நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி தலைமையிலான குழுவினர் கச்சதீவுக்கு பயணமாகியிருந்தனர். வழக்கமாக கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவில் பிக்குகள் எவரும் பங்கேற்பதில்லை. இந்த நிலையில், நேற்றைய தினம் பிக்குகள் குழு ஒன்று அங்கு சென்றிருப்பது கத்தோலிக்க மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இதனிடையே, அங்கு சென்ற பிக்குகள் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள பல பகுதிகளுக்கும் சென்று திரும்பியிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை - 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அண்மைக்காலமாக இந்தியா விடுத்து வரும் அழுத்தங்கள் - கரிசனை குறித்து தென்னிலங்கையில் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. இந்த நிலையிலேயே இந்திய - இலங்கை தமிழர்களின் உறவாடும் இடமாக உள்ள கச்சதீவுக்கு பௌத்த பிக்குகள் குழு வருகை தந்தமை கவனத்தை பெற்றுள்ளது. (ஐ-03)

## தேர்தலுக்காக ஒதுக்கிய நிதியை தடுக்க முடியாது!

### உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 04

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரி தடுத்துவைக்க முடியாது - இவ்வாறு செயல்பட அரச அதிகாரிகளுக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுசெயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனு தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியை வழங்காத தன் மூலம் திறைசேரியின் செயலாளர் உட்பட்டவர்கள் பொதுமக்களின் 15

## "எங்களை வாழ விடுங்கள்"

### இந்திய பிரதிநிதிகளிடம் வடக்கு மீனவர்கள் கண்ணீர் கோரிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 04

"தயவு செய்து எங்களை வாழ விடுங்கள். நாம் மூன்று தடவைகள் பேரழிவுகளை சந்தித்தவர்கள். எமது வாழ்வாதாரத்தை அழித்து விடாதீர்கள்..." - இவ்வாறு கண்ணீர் மல்க வடக்கின் மீனவ பிரதிநிதிகள் இந்திய பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இழுவை மடித் 15



## 9ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலுக்கான புதிய திகதி!

யாழ்ப்பாணம், மார்ச் 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதி எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கூடி நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி புதிய தேர்தல் திகதியை அறிவிக்கும் என்று ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 15

## பொருட்களின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 04

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க அவதானம் செலுத்தியுள்ளோம். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் வழங்கியுள்ள ஒத்துழைப்பை வரவேற்கிறோம் என நிதி 15

## இந்திய மீனவர்களுக்கு விரைவில் நல்ல முடிவு!

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 04

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் விரைவில் சந்திக்கவுள்ளனர். இதன்போது, இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்துக்கு ஆரோக்கியமான முடிவு கிடைக்கும்", என்று இந்திய மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

நமது முன்னணி அரசியல் விமர்சகர் ஒருவரை சில மாதங்களுக்கு முன்னர் கேட்டேன், இந்த காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மக்கள் மயப்படாததற்கு என்ன காரணம் என்று?

அதாவது, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்கள் அவ்வப்போது நடக்கின்றன. அதில், தத்தமது குடும்பங்களில் யாரையேனும் இழந்தவர்கள்தான் கலந்து கொள்கின்றார்கள். ஆனால், அது ஒரு மக்கள் போராட்டமாக மாறவில்லையே ஏன் என்று அவரிடம் கேட்டதற்கு அவர் சொன்னது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

எல்லாம் நமது புலம்பெயர் ‘குறூப்’களின் கைங்கரியம்தான். அங்குள்ள ஒவ்வொரு குழுக்களும் தாயகத்தில் தத்தமது தேவைகளுக்காக சிலரை பயன்படுத்த முனைவதால், அந்தக் குழுக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்களை கையாளும் பல்வேறு குழுக்கள் நம் மத்தியில் தோன்றியதுதான் அதற்கு பிரதான காரணம் என்றார் அவர்.

உண்மைதான், அது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் மாத்திரமல்ல, நமது அரசியல் கட்சிகளிடையேயும் இப்போது தோற்றம் பெற்றிருக்கின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்கும் பல்வேறு குழுக்களும் இப்போது தத்தமது விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்ள அரசியல் கட்சிகளையும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

அதனால்தான் ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் புதிதுபுதிதாக குழுக்கள் தோற்றம்பெற்று வருகின்றனவோ என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிலரின் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கியதும், கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இழந்த சிலர் அப்போது விக்னேஸ்வரனை முன்நிறுத்தி ஓர் அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்ப முயன்றது தெரிந்ததுதான்.

தமிழ் மக்கள் பேரவை என்று தொடங்கி, விக்னேஸ்வரனின் தலைமையில் ஒரு பேரியக்கத்தை கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகள் புஷ்வாணமாகிப் போயின.

அப்போது, மக்கள் பேரவையினர் ‘எழுக தமிழ்’ நடத்தியபோது அருகருகே நின்ற கஜேந்திரகுமார் சில நாட்களிலேயே சுரேஷ் பிறேமசந்திரனை இந்திய கைக்கூலி என்றதும், விக்னேஸ்வரன் மீது சேறடிப்பு செய்ததும், எதனால் என்பது இரகசியமானதல்ல.

புலம்பெயர் குழுக்களின் நிகழ்ச்சி நிரலில் இயங்குபவர்களால் இது போன்ற நெருக்கடிகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுதான்.

புதிது புதிதாக புலம்பெயர் மண்ணில் தோற்றம்பெறும் குழுக்கள், தமக்கு தாயகத்தில் ஓர் அரசியல் அணியின் ஆதரவைப்பெற அவர்களுக்கு ‘தேவையான’ வசதிகளை செய்துகொடுக்க அவ்வப்போது முயன்று கொண்டுதான் இருக்கின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து மணிவண்ணன் வெளியேற்றப்பட்ட பின்னர், அவர் ஈ. பி. டி. பியின் ஆதரவுடன் மேயர் தேர்வில் வெற்றிபெற்ற பின்னர் புலம்பெயர் குழு ஒன்றின் கடைக் கண்பார்வை மணிவண்ணன் மீதும் விழுந்ததில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

அவர் புலம்பெயர் நாடுகளுக்கு அழைக்கப்பட்டு ‘கவனிக்கப்பட்டதும்’ எதனால் என்பதும் தெரிந்ததுதான்.

கடைசியாக கூட்டமைப்பிலிருந்து தமிழரசு வெளியேறிய பின்னர், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் பரந்த கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக முயன்றனர். அப்போது அவர்கள் விக்னேஸ்வரனையும் இணைப்பதில் அதிக கரிசனை கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஆனால், அந்த பேச்சுகள் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னால் விக்னேஸ்வரனுடன் இணைந்திருந்த மணிவண்ணன் தரப்பினர் அத்தகைய இணைப்பு ஒன்றை விரும்பவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது.

அதற்குக் காரணம் என்ன என்பதை கண்டறிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. அந்தக் கூட்டணி தொடர்பான கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது மணிவண்ணன் தரப்பினர் கூட்ட மண்டபத்துக்கு வெளியே சென்று சிலருடன் தொலைபேசியில் அடிக்கடி ஆலோசனை செய்து கொண்டிருந்ததையும் கூட்ட மண்டபத்துக்கு வெளியே நின்றுகொண்டிருந்த ஊடகவியலாளர்கள் கவனிக்கத் தவறவில்லை.

இவையெல்லாம் பழைய சங்கதிகள் என்றாலும், இப்போதும் அதுபற்றி பேசவேண்டியிருக்கின்றது.

மணிவண்ணன் இப்போது விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் சங்கமமாகியிருந்தாலும், அவரின் பழைய தொடர்புகள் இப்போதும் அவருக்கு இருக்கவே செய்யும்.

அண்மையில், உள்ளூராட்சி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், விக்னேஸ்வரன் ஐயா ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்திருந்தார்.

தேர்தல் செலவுகளுக்காக நிதி உதவி செய்யுமாறு அவர் விடுத்திருந்த அழைப்பு குறித்து இந்தப் பத்தியிலும் எழுதியிருந்தேன்.

இப்போது அதுவே விக்னேஸ்வரன் ஐயாவுக்கு புதிய நெருக்கடியை கொடுத்திருக்கிறதாம்.

அவர் மக்களிடம் நேரடியாக உதவிக்கு கோரிக்கை விடுக்க, அந்த கோரிக்கையை வைத்துக்கொண்டு பல்வேறு இடங்களிலும் சிலர் நிதி சேகரிப்பில் ஈடுபட்டது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

விக்னேஸ்ரன் கட்சி தொடங்கியதிலிருந்து அவரோடு இயங்கிய பலரும் இப்போது அவருடன் இல்லை. அதற்குக் காரணம் என்ன என்பதை அவரோடு இருந்த அருந்தவபாலன் விபரமாக தெரிவித்தும் இருக்கிறார்.

எல்லாவற்றையும் தன்னை முதன்மைப்படுத்தியே செய்யவேண்டும் என்று நினைப்பவர் விக்னேஸ்வரன். அவரின் கட்சியில் யார் இணைந்தாலும் அவர்தான் தலை. மற்றவர்கள் எல்லோரும் வால்தான்.

ஆனால், தலை இருக்கும்போதே வால்கள் ஆடத் தொடங்கியிருப்பதால்தான் இப்போது புதிய பிரச்னைகளை அவர் சந்திக்கவேண்டி வந்திருக்கின்றது.!

**- ஊர்க்குருவி**

‘வீரர்களின் போர்’ பெருந்துடுப்பாட்டம்:

# 107 ஓட்டங்களுக்கு வீழ்ந்தது மகாஜன 19 ஓட்டங்களால் ஸ்கந்தா முன்னிலை!







யாழ்ப்பாணம், மார்ச் 04

‘வீரர்களின் போர்’ பெருந்துடுப்பாட்டத்தில் மகாஜன கல்லூரி முதல் இன்னிங்ஸில் 107 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்துள்ளது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் ஸ்கந்தவரோதய கல்லூரி அணி 19 ஓட்டங்களால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகிக்கிறது.

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி - சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிகள் மோதும் இரு நாள் பெருந்துடுப்பாட்ட போட்டி ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

மகாஜன கல்லூரி அதிபர் ம. மணிசேகரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் எம். செல்வஸ்தான் தலைமையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதய கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அந்த அணி 46.2 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 107 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தொடக்கம் கொடுத்த அபர்ணன் (11 ஓட்டங்கள்), ரகசியன் (0) சோபிக்கவில்லை. அடுத்து வந்த கஜித் 6, கௌதமன 2, றொசான் 5 என ஆட்டமிழக்க ஆறாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய சுமிஸ்கரன் (32) நிதானமாக ஆடினார். அவரின் ஆட்டமே மகாஜன ஓரளவு போராடக்கூடிய இலக்கை எட்ட உதவியது. மறுமுனையில் அபிசாந்த் (15) மட்டுமே அவருடன் ஓரளவு தாக்குப் பிடித்திருந்தார்.

ஸ்கந்தவரோதய கல்லூரியின் பந்து வீச்சில் கஜானன் 4, நிதுஷன் 3 விக்கெட்களையும் கௌரிசங்கர், கிரிசேகசன், ஸ்ரீபன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு ஆரம்பவீரராகக் களமிறங்கிய வசீகரன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், மறுமுனையில் துவிசனன் 3, சீராளன் 6 என வேகமாக விக்கெட்களை இழந்தனர். பின்னர் வந்த பிரணவன் (22) ஓரளவு போராடினார். கௌரிசங்கர் 11, டிலக்ஷன் 0, கஜனான் 1 என வேகமாக பெவிலியன் திரும்பினர்.

தொடக்க வீரரான வசீகரன் போராடி 43 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் ஸ்கந்தவரோதய கல்லூரி 126 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்திருந்தது. ஸ்ரீபன் 24, கேதுஷன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மகாஜனவின் பந்துவீச்சில் துவாரகன் 5, றொசான் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# வீட்டுக்கு வெளியே நின்ற ஓட்டோ தீ வைத்து எரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 04

வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்கப் பட்டிருந்த முச்சக்கர வண்டியை இனந்தெரியாதவர்கள் தீ மூட்டி எரித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மானிப்பாய் - கட்டுடையில் இடம்பெற்றுள்ளது.



முச்சக்கர வண்டியில் தீ பற்றி எரி வதை அவதானித்தவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இருப்பினும் முச்சக்கர வண்டி பகுதியளவில் தீயில் எரிந்து சேதமானது.

கந்தசாமி ஜெகரூபன் என்பவரின் முச்சக்கர வண்டியே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
04.03.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் கோட்டாபய அல்ல?

தேர்தல் மூலம்தான் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் - போராட்டங்களால் அல்லவென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றுவதில் மக்கள் கிளர்ச்சி வெற்றிபெற்றது. சிங்களவர்களின் பேராதரவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய கோட்டாபய ராஜபக்ஷ அதே மக்களின் வெறுப்பால் அகற்றப்பட்டார். கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க எவருமே எதிர்பாராத வகையில் ஜனாதிபதியானார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், கோட்டாபயவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் காரணமாகவே ரணிலுக்கு வாய்ப்பு கிடைத்தது.

ஆனால், அதே துருப்புச் சீட்டை ரணிலுக்கு எதிராக பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றக்கூடிய சூழல் இல்லை. கோட்டாபயவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சிக்கு பின்னால் பல்வேறு காரணங்கள் இருந்தன. அதில் பிரதானமானது, பொருளாதார நெருக்கடியால் கொழும்பின் மத்தியதர வர்க்கம் விரக்தியுற்றது. கோட்டாபயவின் உரக் கொள்கையால் விவசாயிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டனர். இந்த பின்புலத்தில்தான் கோட்டாபய வெறுப்பு துளிர்விட்டது.

ஆரம்பத்தில் கொழும்பு காலிமுகத்திடலில் சில குழுக்கள் கூடிய போது அதனை எவருமே பொருட்படுத்தவில்லை. ஆர்வக் கோளாறினால் சில இளைஞர்கள் ஒன்றுகூடியிருப்பதாகவே நோக்கப்பட்டது. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல - சில நூறு சில ஆயிரமாகி பின்னர் இலட்சக்கணக்கான மக்களின் திரட்சியாக மாறியது. கோட்டாபயவை வெளியேற்றுவதே ஒரேயோர் இலக்காக இருந்தது. கூடவே மகிந்த ராஜபக்ஷவையும் வெளியேற்றியது.

கோட்டாபயவுக்கு எதிரான கிளர்ச்சிக்கு ஜே. வி. பி. மற்றும் முன்னிலை சோசலிச கட்சிகளும் ஆதரவளித்திருந்தன. ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்களும் பங்குகொண்டிருந்தனர். கிட்டத்தட்ட முழு நாட்டையுமே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். வேறுபட்ட இலக்குகள் சிலருக்கு இருந்த போதிலும்கூட, கோட்டாபயவின் வெளியேற்றத்தோடு கிளர்ச்சியில் பங்குகொண்டவர்கள் படிப்படியாக கலையத் தொடங்கினர். பாராளுமன்றத்தை இலக்கு வைத்து ஒரு குழுவினர் முன்னேறத் தொடங்கியபோது, முதன்முதலாக ரணில் விக்கிரமசிங்க அவரின் அதிகார முகத்தை காண்பித்தார்.

இதேவேளை ‘அறகலய’ கிளர்ச்சியை ஓர் இலக்குடன் நீர்த்துப் போகச் செய்வதிலும் ரணில் கவனம் செலுத்தினார். மத்தியதர வர்க்கம் அரச எதிர்ப்பை கைவிட்டது. ஒரு பெரும் எழுச்சியாக தோற்றம் காட்டிய அறகலயவை ஜனாதிபதி மாளிகையில் பியர் கிளாஸை திருடிச் சென்றவர், ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தவர்கள், நீச்சல் தடாகத்தில் இறங்கிவர்கள் - எனப் பலரை பொலிஸார் கைது செய்தனர். இதன் மூலம் அறகலய மீதான மக்கள் கவர்ச்சி படிப்படியாக மலினப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக பிறிதொரு கிளர்ச்சியை திட்டமிடும் முயற்சிகள் திட்டமிட்ட வகையில் தடுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஆட்சி மாற்றத்தை தேர்தல்கள் மூலம் ஏற்படுத்த முடியுமே தவிர, போராட்டங்களால் அல்ல என்று ரணில் கூறுகின்றார். ரணிலுக்கு எதிராக மக்களை திரட்ட வேண்டுமென்றால், மீண்டும் பெற்றோலுக்கான வரிசை - எரிபொருளுக்கான நீண்ட வரிசை ஏற்பட வேண்டும். அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலையும் அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு ரணிலுக்கு எதிராக மக்களை திருப்பலாம். ஆனால், அது நடக்குமா?

# 13ஐ எதிர்க்கும் தேரர்களின் பின்னால் அந்நிய சக்திகள்!

### கூறுகிறார் அர்ஜூன் சம்பத்

*கொழும்பு, மார்ச் 04*

*அரசியலமைப்பின் 13ஆவது சீர்த்திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது, அதனை எரிப்போம் என்று கூறும் பௌத்த துறவிகளின் பின்னால் ஏதோ ஒரு அந்நிய சக்தி இருக்கலாம் என இந்தியாவின் இந்து மக்கள் கட்சியின் நிறுவுனரும் அதன் தலைவருமான அர்ஜூன் சம்பத் தெரிவித்துள்ளார்.*

*இலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இந்திய திருநாடு இலங்கையிடம் முன்வைத்திருக்கின்றது.*

*இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், பாரத பிரதமர் நரேந்திர மோடி இவர்களெல்லாம் தொடர்ந்து இதனை வலியுறுத்தி வருகின்றார்கள்.*

*ஆனால், உடனடியாக இலங்கையில் அதற்கொரு நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இங்கு இருக்கக் கூடிய பௌத்த துறவிகள் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என தெரிவித்து இங்கிருக்கும் அரசியல் கட்சிகளுக்கு ஓர் அழுத்தத்தை பிறப்பிக்கின்றார்கள்.*

*சொல்லப்போனால் ஒட்டுமொத்த பௌத்த மக்களினுடைய பிரதிநிதிகள் அவர்கள் மட்டுமே அல்லர். அதாவது 13ஆவது சீர்த்திருத்தத்தை எரிக்கின்றேன் என்று சொல்பவர்கள் மட்டும் அல்லர். அவர்கள் வேறு ஏதோ அந்நிய சக்திகளால் தூண்டிவிடப்பட்டு இதனை செய்கின்றார்கள். இதற்குள் ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்கின்றது.*

*உண்மையாக 13ஆவது திருத்தம் என்பது பௌத்தர்களுக்கு எதிரானதா என்று கேட்டால் கிடையாது. சிங்கள மக்களுக்கும் எதிரானது கிடையாது. இது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே ஒரு தீர்வு.*

*13ஆவது திருத்தம் வலியுறுத்தப்படுவது இன்று நேற்று அல்ல. ஜெயவர்த்தன அவர்கள் ராஜிவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்தில் இரண்டு நாட்டினுடைய பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர்.*

*எனவே இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது இலங்கையினுடைய பொறுப்பாகும், சில மத சார்பானவர்கள் ஏதோ சொல்கின்றார்கள் என்பதற்காக அதனை நடைமுறைப்படுத்தாமல் தவிர்க்க முடியாது- என்றார். (அ)*

# கனடாவில் தொழில் வாய்ப்பு; 75 பேரை ஏமாற்றியவர் கைது

*கொழும்பு, மார்ச் 04*

*கனடாவில் தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்து பணம் மோசடி செய்துவந்த நபர் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்டவர், 75பேரிடம் 4 கோடி ரூபாய்க்கும் அதிகம் மோசடி செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.*

*தொழில் பெற்றுத்தருவதாகத் தெரிவித்த நபரின் மோசடியில் சிக்குண்டவர்கள் 5 இலட்சம் ரூபாய் முதல் 22 இலட்சம் ரூபாய் வரை வழங்கியுள்ளனர். இதேசமயம், ஒருவர் 33 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளார் என்றும் தெரிய வருகிறது.*

*கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருடன் மேலும் ஒரு நபர் தொடர்பில் இருக்கிறார் என்றும், அரசியல் பலம் உள்ளவர்களின் தலையீட்டின் அடிப்படையிலேயே இந்த மோசடி இடம்பெறுகிறது என்றும் மோசடியில் சிக்குண்டுள்ள நபர் ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.*

*நாடு முழுவதும் இந்த மோசடியில் சிக்குண்டவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு சென்று குறித்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்தபோதும் அந்த முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.*

*இந்த சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப்பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பணயகம் அறிவித்துள்ளது. (ஐ)*

# வட்டி வீதத்தை உயர்த்தியது இலங்கை மத்திய வங்கி!

*கொழும்பு, மார்ச் 04*

*இலங்கை மத்திய வங்கி அதன் நாணய கொள்கையில் வட்டி வீதங்களை உயர்த்தியுள்ளது. இந்த வட்டி விகிதங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டன.*

*இதற்கிணங்க, நிலையான வைப்பு வட்டி வீதம் 15.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது. இதேவேளை, மத்திய வங்கியால் கடனுக்காக அறவிடப்படும் வட்டி வீதம் 16.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.*

*சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் பணவீக்கத்தை மேலும் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்த வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படுவதாக மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# ஈரோடு இடைத்தேர்தல் தி. மு. க. கூட்டணி வெற்றி!

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில், தி. மு. க. கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் 66 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்றார். அ. தி. மு. க. வேட்பாளர் தென்னரசு 43 ஆயிரத்து 922 வாக்குகள் பெற்றுள்ளார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் 10 ஆயிரத்து 827 வாக்குகளும், தேமுதிக வேட்பாளர் ஆனந்த் ஆயிரத்து 432 வாக்குகளும் பெற்றுள்ளனர். இதன்படி, காங்கிரஸ் வேட்பாளர் இளங்கோவன் 66 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அ. தி. மு. க. வேட்பாளர் தவிர, தோல்வியடைந்த ஏனைய அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர். (ஐ)

# பொதுக்குழு தீர்மான வழக்கு; பழனிசாமி பதிலளிக்க உத்தரவு

சென்னை, மார்ச் 04

பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்த வழக்கில் அந்தக் கட்சித் தரப்பு விளக்கத்தை கேட்காமல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது என மறுப்பு தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம் இந்த வழக்கு குறித்து இரண்டு வாரங்களில் எடப்பாடி பழனிசாமி பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த அ. தி. மு. க. பொதுக்குழுவுக்கு எதிராக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, பொதுக்குழு செல்லாது என்று தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், ஜூலை 11 பொதுக்குழு தீர்மானங்களை ரத்து செய்யக் கோரி முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அணியினர் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது நீதிபதி, "இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பு விளக்கங்களை கேட்காமல் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது. இந்த மனு குறித்து அ. தி. மு. க. மற்றும் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் 2 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை, எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

# பழனிசாமியின் தலைமையின்றி அ. தி. மு. க. இணைந்தாலே தி. மு. கவை வெல்ல முடியும்

## டி. டி. வி. தினகரன் தெரிவிப்பு

மதுரை, மார்ச் 04

எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமை இன்றி அனைவரும் ஒருங்கிணைந்தால் மட்டுமே தி. மு. கவை வெற்றிபெற முடியும் என்று அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன் தெரிவித்தார்.

"இடைத்தேர்தல் முடிவு அனைவருக்கும் தெரிந்த முடிவு. மருங்காபுரி மற்றும் ஆர். கே. நகர் இடைத்தேர்தலில் மட்டும் எதிர்க்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஆனால், தி. மு. க.மீது தற்போது மக்கள் கடுமையான அதிருப்தியில் உள்ளனர். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஸ்டாலின் வார்த்தை ஜாலம் தான் செய்கிறார். இந்தத் தேர்தல் முடிவு மக்களவைத் தேர்தலில் பிரதிபலிக்காது என்பது கடந்த காலத்தை பார்த்தாலே தெரியும். 20 மாத ஆட்சியில் மக்கள் எந்த அளவுக்கு வேதனையில் உள்ளார்கள் என்பதை உளவுத் துறை மூலமாக முதலமைச்சருக்கு தெரியும்.

அதை அறிந்த காரணத்தால் தான் இடைத்தேர்தலில் தெருவுக்கு ஓர் அமைச்சர் என்ற வகையில் வேலை பார்த்தார்கள். இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு வாக்காளருக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக சேர்ந்திருக்கும். அதிகாரத்தையும், பணத்தையும் பயன்படுத்தி வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றி வாங்கப்பட்டது. மக்கள் வழங்கியது அல்ல.

தேர்தல் தோல்வியால் தொண்டர்கள் கவலையில் உள்ளனர். பழனிச்சாமி பிடியில் அதிமுக இருக்கிற வரைக்கும் எந்த முன்னேற்றமும் கிடையாது. நாங்கள் பழனிச்சாமி தலைமையில் இணைய வாய்ப்பே இல்லை. கே. பழனிச்சாமி தலைமை இல்லாமல், அனைவரும் ஒருங்கிணைந்தால் மட்டுமே தி. மு. கவை வெற்றி பெற முடியும்" - என்றார். (ஐ)

# கூட்டணியிலிருந்து விலகியிருப்பதாக காட்டுவது பா. ம. கவின் தேர்தல் தந்திரம்!

## திருமாவளவன் சாடல்

திருவண்ணாமலை, மார்ச் 04

"அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து விலகியிருக்கிறோம் எனக் கூறி பேரத்தின் வலிமையை கூட்டுவதுதான் பா. ம. கவின் தேர்தல் தந்திரம்" என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி கூறியுள்ளார். மேலும், "தி. மு. க. கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுதியாக இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பாராளுமன்ற தேர்தலுக்கான வியூகம் அமைக்கப்பட்டு வருவது குறித்து தி. மு. க. தலைவர் மு. க. ஸ்டாலின், தி. மு. க. கூட்டணியின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்துள்ளார். அவரின் துணிச்சலான முடிவை நெஞ்சார பாராட்டி சிறுத்தைகள் கட்சி வரவேற்கிறது. தி. மு. க. முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் விடுதலை சிறுத்தைகள் துணையாக இருக்கும். பா. ஜ. க. தலைமையிலான சனாதன சக்திகளை, 2024இல் நடைபெறக் கூடிய பாராளுமன்ற தேர்தலில் வீழ்த்த வேண்டும் என ஸ்டாலின் அழுத்தமாக கூறிப்பிட்டுள்ளார்.

திருமாவளவன் உள்நோக்கத்துடன் பேசுகிறார், முதல்வரை பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் சந்தித்தால் அச்சப்படுகிறேன், கலக்கமடைகிறேன் எனப் பேசுகின்றனர். கற்பனையான கருத்து. முதல்வர் என்ற முறையில் யாரும் சந்திக்கலாம், பா. ஜ. கவினரும் சந்திக்கலாம்.

பா. ம. கவுக்கு ஒரு கலாசாரம் உண்டு. கூட்டணியில் இருப்பார்கள், தேர்தல் நெருங்கி வரும் சூழலில் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, எந்தக் கூட்டணியில் இருந்தார்களோ, அந்தக் கூட்டணியில் இருந்து விலகி இருப்பார்கள். கூட்டணிக்கு தலைமை வகிக்கும் 2 அணி தலைவர்களுக்கும் ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புவார்கள். நான், இந்தப் பக்கமும் பேச முடியும், அந்தப் பக்கமும் பேச முடியும். ஒரே அணியில் இல்லை என்பதை தெரிவிப்பார்கள். அப்படி இருந்தால் பேர வலிமையை கூட்ட முடியாது. பேரத்தின் வலிமையை கூட்டுவதற்கு, ஒரு சூழ்ச்சி மற்றும் தந்திரத்தின் அடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சி செயல்படுகிறது - என்றார். (ஐ)

**மார்ச் - 04 சனிக்கிழமை**
சுபகிருது வருடம் - மாசி 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரையோதசி




**மேடம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது அலைபேசியில் பேச வேண்டாம். போட்டிகளை சமாளிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண் பீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறை வேறும். அந்தஸ்து உயரும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர் பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும்.வேலைச்சுமை இருக்கும். சிலர் பொறுமை அதிகம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மகரம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனு கூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் வந்து பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**மீனம்**
பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினைகள் தீரும்.



# ஜனாதிபதிக்கு பாராட்டு

கொழும்பு, மார்ச் 04

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை உரிய நேரத்தில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பொலனறுவை விவசாயிகள் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

பொலனறுவை மின்னேரிய பிரதேசத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பொலனறுவை மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் ஆனந்த ராஜபக்ஷ உள்ளிட்ட விவசாயிகள் ஜனாதிபதிக்கு தமது சங்கத்தின் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்காக ஆற்றிய பணியைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு "ரன் வீ கரல" (தங்க நெற்கதிர்) என்ற பெயரிலான பரிசும் இங்கு வழங்கப்பட்டது. (அ)

# சுயாதீன ஆணைக்குழுக்களில் அரசியல் தலையீடு பேராபத்து

## ரணில் ஆட்சியின் அபாயத்தை சுட்டிக்காட்டும் ஜானக ரத்நாயக்க



கொழும்பு, மார்ச் 04

"ஒரு ஜனநாயக நாட்டில், அரசியல்வாதிகள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களின் விவகாரங்களில் ஈடுபட்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்கு செலுத்துவது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலையாகும்" என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

15 ஆண்டுகளாக இயங்கி வந்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுதந்திரம் தற்போது சவாலுக்கு உள்ளாகியுள்ளது என்று அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -"பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுதந்திரம் பற்றி அனைவரும் அறிந்தவர்கள். அரசியல்வாதிகளின் செல்வாக்கு காரணமாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் அவர்களின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிவதுடன், முறைமை மற்றும் அவர்களின் மனசாட்சியின்படி செயல்படவில்லை.

நல்லாட்சிக்கோ அல்லது நாட்டின் ஜனநாயகத்திற்கோ நல்லதல்ல என்பதால், இந்த நிலை எதிர்காலத்தில் தொடராது என நம்புகிறோம்.

எவ்வாறாயினும், அண்மையில் எனது அனுமதியின்றி மின்கட்டணத்தை உயர்த்தியமை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

சமீபத்திய கட்டணத் திருத்தம் தொடர்பாக எடுக்கப்பட்ட ஆவணங்களை நான் சவால் செய்யப் போகிறேன். அதை மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். இது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட முறையான ஆவணம் அல்ல - என்றார். (அ)

# இலங்கை ஏற்றுமதி வருமானம் 1,000 மில். டொலராக அதிகரிப்பு!

## கை கொடுத்தது தேயிலை

கொழும்பு, மார்ச் 04

ஏற்றுமதி வருமானத்தை நிலையான மட்டத்துக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், இவ்வருட முதல் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் 1,000 மில்லியன் டொலரை விட அதிகரித்துள்ளது.

இதனை, சுங்கத் திணைக்களத்தின் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன் பிரகாரம் இவ்வருட ஜனவரியில், வர்த்தக பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 1,000.9 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதென்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்றுமதி வருமானமாக 1,100.9 டொலரைப் பெற முடிந்தது. மேலும், இவ்வருட ஜனவரியில், இவ்வருமானம் 8.98 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், 2021 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 6.97 வீதமாக உயர்வடைந்துள்ளதாக அச்சபை கூறியுள்ளது.

ஆடை உற்பத்தித் துறை மூலமாகவே அதிக ஏற்றுமதி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆடை ஏற்றுமதியால் 423.13 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக கிடைத்துள்ளது. அத்துடன் 99.56 மில்லியன் அமெரிக்க டொலர் தேயிலை ஏற்றுமதி மூலமும், 75.89 மில்லியன் அமெரிக்க டொலர் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் சார்ந்த ஏற்றுமதி மூலமும் கிடைத்துள்ளன.

கடந்த ஜனவரி மாதத்தை விட அதிக ஏற்றுமதி அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 254.78 மில்லியனாகும். அத்துடன் ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதி வருமானம் 77.42 மில்லியன் அமெரிக்க டொலராகவும், இந்தியாவுக்கான ஏற்றுமதி வருமானம் 69.58 மில்லியன் அமெரிக்க டொலராகவும் ஜேர்மனிக்கான ஏற்றுமதி வருமானம் 48.12 மில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரித்துள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

அதனைவிட இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஐக்கிய அரபு இராச்சியம், பெல்ஜியம், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், பங்களாதேஷ் மற்றும் மெக்ஸிக்கோ உள்ளிட்ட நாடுகளுக்கும் இலங்கையின் உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது. (அ)

# இ.போ.ச கிளிநொச்சி சாலையின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

கிளிநொச்சி, மார்ச் 04

கிளிநொச்சி இ. போ.ச சாலை பணி யாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால், பஸ்கள் காலையில் சேவையில் ஈடுபடவில்லை.

அலுவலகப் பணி யாளர்க ளுக்கான பஸ் சேவையை இ.போ.சவினர் ஆரம்பித்த பின்னர், தனியார் துறையினர் அதில் குறுக்கீடு செய்ய ஆரம் பித்ததைத் தொடர்ந்து, தற்போது தனியார்துறையினரே அந்த சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், அதன் தொடர்ச்சி யாக இ.போ.ச பஸ்களின் சுமுகமான சேவைக்கு தனியார் துறையினர் தொடர்ந்து அச்சுறுத்தலாகச் செயற்பட்டு வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமும் தனியார் பஸ் ஒன்று, இ.போ.ச பஸ்ஸை நடு வீதியில் வழி மறித்து மிரட்டல் விடுத்திருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்று பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. (அ)



# அரச அதிபர் அனுமதிக்காத ஊடகங்களை உடனடியாக உள்ளே அழைத்த அமைச்சர்!

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி முன்னாயத்தக் கலந்துரையாடலுக்கு ஊடகங்களை உள்ளே அனுமதிக்காது புறக்கணித்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக ஊடகவியலாளர்களை உள்வருமாறு அழைத்தார்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிப்பது வழமை. ஆனால் தற்போதைய அரச அதிபர் அனுமதிக்காமை தொடர்பில் அமைச்சரிடம் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், ஊடகங்களை அரச அதிபர் அனுமதிக்காமை தொடர்பில் எனக்கு முன்கூட்டியே தெரியாது. தெரிந்திருந்தால் உடனடி நடவடிக்கை எடுத்திருப்பேன்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நான் தான். கூட்டத்துக்கு ஊடகவியலாளர்களை அனுமதிப்பது தொடர்பில் நான் தான் முடிவு எடுக்க முடியும் என தெரிவித்தார். (அ)



# குருநகர் இழுவைப் படகுகளால் பூநகரி மீனவர்களுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 04

கிளிநொச்சி - பூநகரி பள்ளிக்குடா மேற்குப் பகுதி, கௌதாரிமுனையின் தெற்குப் பகுதிகளில் யாழ்ப்பாணம்-குருநகர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்புகளை உருவாக்கி உள்ளதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி. சிறிரஞ்சன் தெரிவித்தார்.

பள்ளிக்குடா, கௌதாரி முனை இடங்களில் ஆழங் குறைந்த பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபட்டு நண்டு வலை, டிஸ்கோ வலை, கணவாய் குழை என்பவற்றினை சேதப்படுத்தி வருவதன் காரணமாக உள்ளூர் தொழிலாளர்களின் தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் 15 தொடக்கம் 50 வரையான இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன.

இழுவைப் படகுகள் ஆழமான கடற்பகுதியில்தான் தொழிலில் ஈடுபடவேண்டும். கரையில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு உட்பட்ட இடங்களில் ஆழங்குறைந்த பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர், துறைசார் அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து அவதானிப்புகளை மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (அ)

# அரசின் முக்கிய தீர்மானங்களினால் ரூபாவின் பெறுமதி வலுவடைகிறது!

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய விளக்கம்



கொழும்பு, மார்ச் 04

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை, அமைதியான சூழல் உட்பட பொருளாதாரம் தொடர்பாக அரசாங்கம் எடுத்த பல முக்கிய தீர்மானங்களினால் இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் அறிக்கையின்படி, 2022 செப்ரெம்பரில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு கடந்த பெப்ரவரிக் குள் 23.5 வீதத்தினால் அதிகரித்து 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

அதற்கமைய, வெளிநாட்டு கையிருப்பு 400 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கடந்த 2022 செப்ரெம்பரில் 94.9 வீதமாக இருந்த மொத்த பணவீக்கம் 2023 ஜனவரியில் 60.1 வீதமாகக் குறைந்துள்ளது.

அத்துடன், கடந்த 2022 செப்ரெம்பரில் 29,802 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 261 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

கடந்த பெப்ரவரிக்குள் 107,639 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதாரம் தொடர்பில் அரசாங்கம் எடுத்த பல முக்கிய தீர்மானங்களினால் இந்த அபிவிருத்திகள் அனைத்தும் சாத்தியமானதாக அவர் மேலும் கூறினார். (அ)

# வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 20 அகதிகள் இலங்கைக்கு வர விருப்பம்

கொழும்பு, மார்ச் 04

சட்டவிரோதமாக கடல் வழியாக பயணித்தபோது, படகு பழுதடைந்ததில் நிர்க்கதியாகி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளில் 20 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு தேவையான நிதி வசதிகளை அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு முன்னெடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வியட்நாமில் தற்போது 152 இலங்கை அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அன்றாட தேவைகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கு திரும்பி வர இணக்கம் தெரிவிக்காத 130 பேரும் , அகதிகளுக்கான சர்வதேச அமைப்பினூடாக மூன்றாம் தரப்பு நாடுகளிடம் தீர்வை கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வியட்நாமின் ஹனோயில் உள்ள இலங்கை தூதரகம், இந்த விடயம் குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.(அ)

# லஹிரு, சுகதானந்த தேரருக்கு எதிரான பிடியாணையை மீளப்பெற உத்தரவு!

கொழும்பு, மார்ச் 04

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் லஹிரு வீரசேகர மற்றும் பிக்கு மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் டெம்பிட்டியே சுகதானந்த தேரர் ஆகியோருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப் பெறுமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து நேற்று அவர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறி அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் அவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்க வில்லை.

இதனையடுத்து, கோட்டை நீதிவான் திலின கமகேவினால் அவர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், எதிர்கால வழக்கு விசாரணைகளின்போது உரிய வகையில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# வெளிநாடு செல்வோரின் உயிரியளவியல் தரவுகளைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 04

வேலைவாய்பிற்காக வெளிநாடு செல்பவர்களின் உயிரியளவியல் தரவுகளை பெற்றுக்கொள்ள தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆட்கடத்தலை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தலை தடுக்கும் தேசிய செயற்குழு, இந்த செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற போர்வையில் இடம்பெறும் ஆட்கடத்தலில் இருந்து தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 2023 ஜனவரி மாதத்தில் 24ஆயிரத்து 236 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைகளுக்காக வெவ்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனர்.



# நுவரெலியா பொது வைத்தியசாலை ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

கொழும்பு, மார்ச் 04

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிற்றூழியர்கள் என பலரும் இணைந்து பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்று பிற்பகல் வைத்தியசாலை பிரதான நுழை வாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும், முறையற்ற நியமனம் வழங்குவதை நிறுத்து, வாழ்வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தை குறை , ஊழியர் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய், வான் உயரத்தில் பண வீக்கம் நடு வீதியில் உத்தியோகஸ்தர்கள் போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இந்த போராட்டத்தை அனைத்து சேவைகளையும் இடைநிறுத்தி பாரியளவில் முன்னெடுக்கப்போவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இப்போராட்டம் காரணமாக வைத்தியசாலைப் பணிகள் பாதிக்கப்பட்டதுடன், நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரூபா பெறுமதி மேலும் உயர்வு

கொழும்பு, மார்ச் 04

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்தது.

இலங்கை மத்திய வங்கியினால் நேற்றுக் காலை வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை ரூபா 334.50 ஆகவும் விற்பனை விலை ரூபா 348.03 ஆகவும் உள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கணிசமான அளவில் அதிகரித்து வருகின்றது.

தரகர்கள் மற்றும் நிபுணர்களின் கூற்றுப்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தின் அதிகரிப்பு காரணமாக முதலீட்டாளர்களிடையே நம்பிக்கை அதிகரிப்பதன் மூலம் ரூபாயின் மதிப்பு உயர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# முட்டைகளை அதிக விலைக்கு விற்பதற்காக மறைத்து வைத்திருந்த களஞ்சியத்துக்கு சீல்!

கொழும்பு, மார்ச் 04

ஜா-எல, தண்டுகம பகுதியில் 60,000 முட்டைகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்த வர்த்தகர் ஒருவரின் களஞ்சியசாலைக்கு சீல் வைக்க நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்தனர்.

குறித்த முட்டை இருப்பு தொடர்பில் நீதிமன்றில் விடயங்களை அறிக்கையிட்டு தீர்மானம் எடுக்கவுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல், அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்ரன் நிஷாந்த அப்புஹாமிக்கு சொந்தமான ஜா-எல, தண்டுகம முட்டை களஞ்சியசாலைக்கு முட்டை கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர் சேவை அதிகார சபையின் கொழும்பு விசேட சுற்றிவளைப்பு பிரிவின் அதிகாரி ஒருவர் சென்றுள்ளார்.

களஞ்சியத்தின் உரிமையாளர் அன்ரன் நிஷாந்த அப்புஹாமியிடம் 260 முட்டைகள் வேண்டும் என்று அதிகாரி கேட்டபோது, சில்லறை விலைக்கு முட்டைகளை விற்பனை செய்வதில்லை என்றும், தேவைப்பட்டால் 10,000 முட்டைகளை வழங்கலாம் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் களஞ்சியத்தை சோதனையிட நுகர்வோர் சேவை அதிகாரசபை அதிகாரிகள் குழுவொன்று சென்றது.

களஞ்சியத்தை பரிசோதிக்க அன்ரன் நிஷாந்த அப்புஹாமி கடும் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து ஏற்பட்ட பரபரப்பான சூழ்நிலை காரணமாக நுகர்வோர் சேவை அதிகார சபை அதிகாரிகள் ஜா-எல பொலிஸ் நிலையத்திற்கு சென்று தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக முறைப்பாடு செய்தனர்.

வெலிசர நீதவானிடம் விடயங்களை அறிக்கை செய்ததன் பின்னர், களஞ்சியசாலையை பரிசோதிக்க அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அங்கிருந்து சுமார் 60,000 வெள்ளை மற்றும் சிவப்பு முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்படி, அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்தமை, மறைத்து வைத்து நிபந்தனைகளுடன் விற்பனை செய்தமை போன்ற காரணங்களால் களஞ்சியசாலைக்கு சீல் வைக்க நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்வேறு நிறுவனங்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை விட அதிகமாக 47 ரூபாய்க்கு முட்டைகளை விற்பனை செய்தமைக்கான பற்றுச் சீட்டுக்களும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

(அ)

# யாழ்.வர்த்தக கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார் ஆளுநர்

**யாழ்ப்பாணம்,மார்ச் 04 'வடக்கின் நுழைவாயில்' சர்தேச வர்த்தக சந்தை 13ஆவது தடவையாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.**



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 13 ஆவது தடவையாகவும் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

கண்காட்சிக் கூடத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் இந்த சந்தை நடைபெறுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் தொழில் நுட்பரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

பல வருடகாலமாக வடக்கின் கைத்தொழில் துறை வளர்ச்சி மற்றும் சந்தைவாய்ப்பில் இருந்த பாரிய இடைவெளிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர் பார்க்கிறோம்.

பாடசாலை சீருடையுடன் வருகைதரும் மாணவர்கள் குறித்த கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

# மின்சார கட்டண அதிகரிப்பு ஆடைத்துறையை பாதிக்கும்

கொழும்பு, மார்ச் 04

ஆடைகளுக்கான முன்பதிவுகள் குறைந்துள்ள தருணத்தில் மின் கட்டணத்தை அதிகரிப்பது, எதிர்காலத்தில் நாட்டின் ஆடைத் தொழிற்துறையில், எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஒன்றிணைந்த ஆடைத் தொழிற்துறை சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் உபதலைவர் பீலிக்ஸ் ஏ பெர்னாண்டோ இதனைத் தெரித்துள்ளார்.

மின் கட்டண அதிகரிப்பு காரணமாக உற்பத்திச் செலவு 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டுக்கு வழங்கப்பட்ட ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# யானைகள் தாக்கி இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 04

காட்டு யானைகள் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அம்பன்பொல பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிகவலயாய பிரதேசத்தில் வசிக்கும் 57 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, எஹெதுவெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலில் உயிரிழந்தவர் கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது கல்கமுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், எஹெதுவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜானக ரத்நாயக்கவின் அலுவலகத்திலிருந்த கோப்புகள் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 04

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்னநாயக்கவின் அலுவலகத்தில் இருந்த 28 கோப்புகள் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய, கடந்த 16 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்னாயக்கவின் அலுவலகம் முத்திரையிட்டு பூட்டப்பட்டது.

குறித்த அலுவலகத்தில் அரச எதிர்ப்பு செயற்பாடுகள் இடம்பெறுவதாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தருணத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார்.

இந்தநிலையில், நாடு திரும்பியுள்ள அவருடன் அலுவலகத்திற்கு சென்ற கொள்ளுப்பிட்டி பொலிஸார் அங்கிருந்த கோப்புகளைப் பொறுப்பேற்றனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# சிறைச்சாலை திணைக்கள அதிகாரியின் வீட்டில் கொள்ளையர் கைவரிசை!

கொழும்பு, மார்ச் 04

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவின் அதிகாரபூர்வ இல்லத்தில் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகசீன் சிறைச்சாலை வளாகத்தில் இந்த அதிகாரபூர்வ இல்லம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறைச்சாலை திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தனவின் மனைவியினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வ இல்லத்தை சுத்தம் செய்வதற்கு சிறைக் கைதிகள் ஈடுபடுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கோட்டாபய கொலை முயற்சி வழக்கு

# தமிழ் அரசியல் கைதியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 04

அரசியல் கைதியான சிவலிங்கம் ஆருரனை பொலிசார் சித்திரவதை செய்து கடும் காயங்களை ஏற்படுத்தியுள்ளனர் என்பதனை சாட்சியங்கள் மூலம் நீதிமன்றிற்கு நிருபிக்கப்பட்டுள்ளது என எதிரி தரப்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து அரச தரப்பின் முக்கிய சான்றான முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை 14 வருட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று முன்தினம் நிராகரித்தார்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு கொள்ளுபிட்டி பித்தலை சந்தியில் பாதுகாப்பு செயளாளரான கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலை குண்டுதாரியால் நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மரணத்தை விளைவித்ததுடன் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு கடும் காயங்களை ஏற்படுத்தியதுடன் அரச சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவித்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஐவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நான்காம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரியான பொறியியலாளர் சிவலிங்கம் ஆருரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய பிரதி சொலிசிடர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ரோகாந்த அபேசூரிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததையடுத்து தனது சமர்ப்பணத்தில்

பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸார் இரண்டாம் எதிரியான சிவலிங்கம் ஆருரனை தடுத்து வைத்து விசாரணை செய்த காலத்தில் கைதியை தாக்கவோ சித்திரவதை செய்யவில்லையெனவும் தனது வாதத்தை முன்வைத்ததுடன் கோட்டாபய கொலை முயற்சி தாக்குதலின் எதிரி சதியில் ஈடுபட்டதையும் கொலை முயற்சிக்கு உதவி ஒத்தாசை வழங்கியதையும் சொந்த விருப்பத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலமாக தமிழ் மொழியில் எழுதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார். எனவே எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச தரப்பில் எதிரிக்கு எதிரான சான்றாக நெறிப்படுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிடவேண்டும் என வாதத்தை முன்வைத்தார்.

அரச தரப்பு வாதத்தையடுத்து எதிரியின் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தில்- பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் 2009ஆம் ஆண்டு பொறியியலாளரான சிவலிங்கம் ஆருரனை கைது செய்து தனிமையில் தடுத்து வைத்து சித்திரவதை செய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

அரச சாட்சியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சில்வாவின் சாட்சியத்தை குறுக்கு விசாரனை செய்கையில் சாட்சியத்தில் பல முரண்பாடுகள் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் அரசியல் கைதியான சிவலிங்கம் ஆருரனின் உடலில் காணப்பட்ட காயங்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் எனச் சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தினை குறுக்கு விசாரனை செய்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அரச தரப்பால் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்பதல் வாக்கு மூலத்தை நிராகரிக்கும்படி முன்வைத்த வாதத்தையடுத்து அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரிப்பதாக கட்டளை வழங்கியதையடுத்து எதிரி தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா இந்த அரசியல் கைதி 15 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்து இந்த கைதிக்கு எதிராக மேலும் வழக்கை தொடர்ந்தும் நடத்த வேறு சுயாதீன சாட்சியங்கள் உள்ளனவா இல்லையா என்பதனை சட்டமா அதிபருக்கு நீதிமன்றுக்கு அறிவிக்க மிகக் குறுகிய கால தவணை கொடுக்கும்படி வேண்டிக்கொண்டதை அடுத்து வழக்கு 03.04.2023 ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சவிதா படேல்

# விவேக் ராமசாமி: அமெரிக்க அதிபர் பதவிக்கு டிரம்புடன் மோதும் கோடீஸ்வர இந்தியர்



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மூன்று நபர்களில் இரண்டு பேர் இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள்.

இதில், நிக்கி ஹேலி ஓரளவு அனைவருக்கும் பரிச்சயமான நபர். ஆனால், விவேக் ராமசாமியோ பெரிய அளவில் அறியப்படாதவர்.

தொழிலதிபரும், Woke.Inc என்ற புத்தகத்தை எழுதியவருமான விவேக் ராமசாமி, பெப்ரவரி 21ஆம் தேதி பாக்ஸ் நியூஸ் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பம் குறித்து பேசியிருந்தார். புதிய அமெரிக்க கனவை உருவாக்க கலாச்சார இயக்கம் ஒன்றை உருவாக்க அவர் விரும்புகிறார்.

“மக்களை பிணைப்பதைவிட பெரியது எதுவும் இல்லையென்றால், பன்முகத் தன்மை அர்த்தமற்றதாகிவிடும்” என்றும் அவர் கூறுகிறார்.

37 வயதாகும் விவேக் ராமசாமி, ஓஹியோ மாகாணத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர் இந்தியாவில் உள்ள கேரளாவை பூர்விகமாக கொண்டவர்கள். ஹார்வார்ட், யேல் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற விவேக், பயோடெக் தொழிலதிபராக முதலில் பணம் சம்பாதிக்க தொடங்கினார். பின்னர், சொத்து மேலாண்மை நிறுவனம் ஒன்றை அவர் தொடங்கினார்.

இனவெறி, காலநிலை குறித்த தனது பேச்சுகளை எப்போதும் நியாயப்படுத்தும் அவர், அவற்றை கார்ப்பரேட் உலகின் ‘விழிப்புவாதம்’ என்று அழைக்கிறார். இனவெறி, காலநிலை ஆகியவை வணிகங்களையும் நாட்டையும் பாதிக்கிறது என்றும் கூறுகிறார். ஒரு நிறுவனத்தின் சமூக, சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடப் பயன்படும் ESG (சுற்றுச்சூழல், சமூக மற்றும் பெருநிறுவன ஆளுகை) முயற்சிகளை அவர் எதிர்க்கிறார்.

மேலும், உயர்கல்வியில் உறுதியான நடவடிக்கைகளை கைவிட விரும்பும் அவர், அமெரிக்க பொருளாதாரம் சீனாவை சார்ந்து இருப்பதையும் குறைக்க விரும்புகிறார்.

2022 ஆம் ஆண்டு, தேர்தலில் நியூ ஹாம்ப்ஷயரில் இருந்து அமெரிக்க செனட்டிற்கு போட்டியிட்ட குடியரசுக் கட்சியைச் சேர்ந்த விக்ரம் மன்ஷாரமணி போன்ற சிலருடன் விவேக் ராமசாமியின் கருத்து ஒத்துப்போகிறது. விவேக் ராமசாமி குறித்து மன்ஷாரமணி பேசுகையில், அவர் “மிகவும் ஈர்க்கக்கூடியவர், தெளிவான மற்றும் சிந்தனைமிக்கவர்” என்று விவரிக்கிறார், மேலும் “அமெரிக்காவைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைக்க” தங்கள் இருவரின் கருத்துக்கள் பயன்படுவதாக அவர் கூறுகிறார்.

“அடையாள அரசியல் அமெரிக்காவில் வேரூன்றியிருக்கிறது, அது ஒன்றுபடுத்தும் போக்கைக் காட்டிலும் பிளவுபடுத்தும் போக்குடன் வந்துள்ளது. நம்மிடம் பொதுவாக உள்ளதை நாம் உருவாக்க வேண்டும்,” என்று கூறிய விவேக், சமீபத்தில் நியூ ஹாம்ப்ஷயரில் அவரது குடும்பத்தினர் நிக்கி ஹேலிக்கு விருந்தளித்ததையும் குறிப்பிடுகிறார்.

அதேநேரத்தில், அரசியலில் எதிர் தரப்பில் உள்ள இந்திய அமெரிக்கர்களோ விவேக் ராமசாமியின் அரசியலோடு உடன்படவில்லை என்றும் அவரது பிரசாரத்தில் குறைபுள்ளதாகவும் கூறுகின்றனர்.

AAPI (ஆசிய அமெரிக்கர்கள் மற்றும் பசிபிக் தீவுவாசிகள்) விக்டரி பண்ட், நிறுவன தலைவரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவருமான சேகர் நரசிம்மன், நிறைய ஆசிய-அமெரிக்கர்கள் அரசியலில் முக்கியத்துவம் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடையும் அதே வேளையில், விவேக் ராமசாமியின் கருத்துக்களில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறுகிறார்.

“அவர் ஒரு தொழிலதிபர், தெளிவான திட்டம் வைத்துள்ளார். ஆனால், அவருடைய வாக்குறுதிகள் என்ன?” என்று கேள்வி எழுப்பும் சேகர் நரசிம்மன், “முதியோர்களுக்கான மருத்துவ வசதி குறித்து அவர் கவலைப்படுகிறாரா? உள்கட்டமைப்புக்கு செலவிடுவது குறித்த அவரது திட்டங்கள் என்ன? அவருக்கு நிலையான பதவிகள் இல்லை. தனது கொள்கைகளையும் அவர் வெளிப்படுத்தவில்லை.” என்று கூறுகிறார்.

விவேக் ராமசாமியின் பிரசாரங்களை யதார்த்தமற்றது, நடைமுறைக்கு மாறானது என்று கூறும் அவர், “தன்னிடம் கூறுவதற்கு ஏதோ இருக்கிறது. அதிபர் தேர்தலில் போட்டியிடுவதால் தனது கருத்துகள் கேட்கப்படும் என்று விவேக் ராமசாமி நம்புகிறார்” என்றும் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக குடியரசு கட்சியினரை ஆதரித்து வரும் சமூக உறுப்பினர்கள் பலரும், அதிபர் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிப்பதற்கு முன்புவரை விவேக் ராமசாமி குறித்து தாங்கள் கேள்விப்பட்டதே இல்லை என்று கூறுகின்றனர்.

“அவரை நான் பார்த்ததே இல்லை. அவரிடம் பணம் இருப்பதாகவும் சிறப்பாக பேசுவார் என்றும் என்னிடம் கூறப்பட்டது. ஆனாலும், அவர் வேட்பாளர்களில் ஒருவராகவே இருப்பார். அவர் தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இல்லை” என்று கூறுகிறார் குடியரசு கட்சியின் ஆதரவாளரான மருத்துவர் சம்பத் சிவாங்கி. மற்றவர்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

“தேர்தலில் போட்டியிட விரும்புவதாக அவர் கூறாமல் இருந்திருந்தால் அவர் குறித்து யாரும் பேசியிருக்க மாட்டார்கள்” என ஹோட்டல் அதிபர் டேனி கெய்க்வாட் கூறுகிறார். ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷிலிருந்து குடியரசுக் கட்சியின் அனைத்து அதிபர் வேட்பாளர்களுக்கும் இவர் நிதி திரட்டியுள்ளார்.

அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்பும் விவேக் ராமசாமியின் தைரியத்தை தான் பாராட்டுவதாக கூறும் டேனி கெய்க்வாட், இந்திய- அமெரிக்கர்களுக்கான ஒரு உத்தியை வைத்திருப்பது அவருக்கு மிகவும் முக்கியம் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தலுக்கு இன்னும் நிறைய நாட்கள் உள்ளதாக குறிப்பிட்ட அவர், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் புளோரிடாவின் தற்போதைய ஆளுநர் ரான் டிசாண்டிஸ் (தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னும் இவர் முறையாக அறிவிக்கவில்லை) ஆகியோரை சுட்டிக்காட்டி, புளோரிடாவில் மட்டும் இரண்டு வலிமையான வேட்பாளர்கள் இருக்கக்கூடும் என்று கூறினார்.

அதிபர் வேட்பாளராக தேர்வு செய்யப்படுவதில் டொனால்ட் ட்ரம்ப், ரான் டிசாண்டிஸ், நிக்கி ஹேலி ஆகியோர் இடையே மும்முனை போட்டி இருக்கும் என்பது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இந்திய- அமெரிக்கர்களின் கணிப்பாகும். மேலும் முன்னாள் அதிபர் ட்ரம்பின் சட்டப் போராட்டங்களில் இன்னும் நிச்சயமற்ற தன்மை இருப்பதால், முன்கூட்டியே கூட்டணிகளை உருவாக்குவதற்கு பதிலாக காத்திருக்க விரும்புகிறார்கள்.

ஹேலியின் பிரசார உத்தியை தான் விரும்புவதாக கூறும் சிவாங்கி, ஒருவேளை அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் போட்டியில் இருந்து டொனால்ட் ட்ரம்ப் விலகினால், ஹேலியை தான் ஆதரிப்பேன் என்றும் குறிப்பிட்டார்.



“ட்ரம்ப் 40 சதவீத மதிப்பீட்டை பெற்றுள்ளார். ஹேலியோ ஒற்றை இலக்கத்தில் மதிப்பீட்டை பெற்றுள்ளார். எனினும் அவர் எங்கள் வேட்பாளர். அவர் இந்திய- அமெரிக்கராக இருப்பதுதான் அவருடன் நாங்கள் நெருக்கமாக இருப்பதற்கு காரணம்” என அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று தேர்தல்களிலும் தங்களின் அரசியல் பங்கேற்பு அதிகரித்திருப்பது தொடர்பாக, அரசியல் வேறுபாடுகளை கடந்து இந்திய- அமெரிக்க மக்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

“ஒரு அழகான விஷயம் நடந்து வருகிறது. இந்திய-அமெரிக்கர்கள் முன்னிலை பெறுகின்றனர்,” என்று கெய்க்வாட் கூறுகிறார், சமீபத்திய முயற்சியானது உள்ளூர் அளவில் கூட தேர்தலில் போட்டியிட இந்திய-அமெரிக்கர்களை ஊக்குவிக்கும் என்றும் கூறினார்.

அரசியலில் எதிரெதிர் துருவங்களில் உள்ளவர்களும் இதனை ஆமோதிக்கின்றனர்.

“ராமசாமி போன்ற பெயர் கொண்ட அமெரிக்கர்கள் போட்டியிடுவதை எங்கள் குழந்தைகள் பார்த்தால், ஒரு கண்ணாவோ, கிருஷ்ணமூர்த்தியோ வெற்றி பெற முடியும்” என்று நரசிம்மன் கூறுகிறார்.



# பிரபாகரனின் மகள்: உண்மை சம்பவத்தை விளக்கிய சித்தார்த்தன் எம்.பி

யூ.எல். மப்றூக்




தமிழீழ விடுதலைப் புலிகளின் -தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக பழ. நெடுமாறன் வெளியிட்ட தகவல், நிதி சேகரிப்புக்கான ஓர் அறிவிப்பா கும் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்கி ழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய போது, அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

இந்த நிதி சேகரிக்கும் நடவடிக்கைக் கான கூட்டம் சுவிட்ஸர்லாந்து நாட்டி லேயே முதன் முதலில் நடந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பிரபாகரனின் மகள் துவாரகா லண்ட னில் இருப்பதாகவும், அவருடைய வாழ் வாதாரத்துக்காக நிதி சேகரிக்கப் போவ தாகவும் - அந்தக் கூட்டத்தின் ஏற்பாட் டாளர்கள் கூறியதாகவும் சித்தார்த்தன் எம்பி தெரிவித்தார்.

அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சுவிட்ஸர்லாந்திலுள்ள ஒருவர், பிரபாகர னின் மகளைப் பார்க்க வேண்டுமென கோரிக்கை விடுத்ததாகவும், அந்த நபரின் மகளும் பிரபாகரனின் மகளும் ஒன்றாகப் படித்தவர்கள் எனவும் சித்தார்த்தன் கூறினார்.

இதனையடுத்து அந்த நபர் லண்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்ட தாகவும், அங்கு பிரபாகரனின் மகள் என ஒரு பெண் அறிமுகப்படுத்தப்பட்டதா கவும் நாடாளு மன்ற உறுப்பினர் இதன்போது குறிப்பிட்டார்.

**பிரபாகரன் மகள் என்றவரிடம் தொடுக்கப்பட்ட கேள்வி**

அந்தப் பெண்ணிடம் சுவிட்ஸ ர்லாந்திலிருந்து சென்றவர், 'உங்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கு கற்றுத் தந்தவர் யார்' என கேட்டுள்ளார்.

'பிரபாகரனின் மகளுக்கு யார் வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்தார் என்று சுவிட்ஸர்லாந்திலிருந்து சென்ற நபருக்குத் தெரியும். புலிகளின் பெண்கள் படையொன்றிலுள்ள ஒருவர்தான் பிரபாகரனின் மகளுக்கு வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்தார்".

'அந்தக் கேள்விக்கு பிரபாகரனின் மகள் எனக்கூறப்பட்ட பெண், தவறான ஒரு பதிலை வழங்கியுள்ளார். இதனையடுத்து அந்த நபர், இந்த விடயத்தை உடனடியாக சுவிட்ஸர்லாந்தில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தி, அங்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையை முறியடித்தார்". எனவும் சித்தார்த்தன் எம்.பி தெரிவித்தார்.

**கேவலமான நடவடிக்கை**

தனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும், தான் அறிந்த வகையிலும் பிரபாகரன் உயிரோடு உள்ளதாக அறிவிக்கப்பட்டமையானது, நிதி சேகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும் என்று அவர் கூறினார்.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சென்றவர்களும் தன்னிடம் இதையே சொன்னதாகவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

'இது கேவலமானதும், மலினப்படுத்துகின்றதுமான ஒரு செயல்பாடாகும்" எனவும் அவர் மேலும் கூறினார்.

'தம்பி பிரபாகரன் மீது - நான் மதிப்பு வைத்துள்ளேன். காரணம், அவர் தனது ஒட்டுமொத்த குடும்பத்தையும் அர்ப்பணித்தவர் என்பதனாலாகும். அந்த அர்ப்பணிப்புகளை மலினப்படுத்தி, நாலு பேர் சீவியம் நடத்துவதற்காக பணம் சேர்க்கும் வேலையாகவே இது உள்ளது" எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

'பழ. நெடுமாறன் எங்களுடனும் நெருக்கமாக இருந்தவர். பிரபாகரன் உயிரோடு இருப்பதாக அவர் கூறியதை, பின்னர் - 'சொன்னார்கள், சொன்னேன்' என, அவரே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று, யாரோ சொல்லச் சொன்னதை அவர் சொல்லியிருக்கிறார்" என்கிறார் சித்தார்த்தன்.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை தொடர்பு கொண்டு பேசியபோது, புலிகள் இயக்கம் செயற்பாட்டில் இருந்த காலத்தில், அவர்களின் சுவிஸ் கிளையின் முக்கியஸ்தராக இருந்த ஒருவரும், சுவிஸர்லாந்தில் நடத்தப்பட்ட நிதி சேகரிப்புக்கான கூட்டத்தில் பங்கேற்றிருந்தாக கூறினார்.

**பிரபாகரன் ஒளிந்திருக்கும் ஆள் இல்லை**

'யுத்தம் முடிந்து 13 வருடங்களாகி விட்டன. பிரபாகரனைப் பொறுத்த வரையில் இவ்வளவு காலம் அவர் ஒளிந்திருக்கும் ஒருவர் அல்ல".

'சரி, பிழைகளுக்கு அப்பால் தனிநாட்டுப் போராட்டத்துக்கு அவர் விஸ்வாசமாக இருந்தார். எங்கள் எல்லோரையும் விடவும் அவர் ஆகக்கூடியளவில் அதற்கு விஸ்வாசமாக இருந்தார். அது கேள்விக்கு அப்பாற்பட்டது".



'இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது, நாங்கள் ஜனநாயக அரசியலுக்குத் திரும்பினோம். ஆனால், தனி நாட்டுக்காக கடைசி வரை பிரபாகரன் போராடினார்" என சித்தார்த் தன் கூறினார்.

தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளை போராட்டத்துக்காக பிரபாகரன் அர்ப்பணித்தமைச் சுட்டிக்காட்டிப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், 'தனது குடும்பத்தவர்களை வெளிநாட்டில் வைத்திருப்பதற்கான சந்தர்ப்பம் பிரபாகரனுக்கு இருந்தது. அவர்கள் முன்பு டென்மார்கில் இருந்தார்கள். ஆனால், அவர்களை பிரபாகரன் பின்னர் தன்னிடம் அழைத்துக் கொண்டார்" என்றார்.

இவ்வாறான ஒரு மனிதர் இவ்வளவு காலமும் ஒளிந்து கொண்டு இருக்க மாட்டார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

யுத்தத்தில் கொல்லப்பட்ட புலிகளின் முக்கியஸ்தர்களுடைய உடல்களை கண்டு, அவற்றினை ஏற்றுக் கொண்டவர்கள், பிரபாகரனின் உடலை - அவருடையது தான் என ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என கேள்வியெழுப்பும் அவர், 'பிரபாகரனின் மரணத்தை ஏன் பொய் எனக் கூறுகின்ற னர்?" எனவும் வினவினார்.

பிரபாகரனின் உடலைப் பார்த்த பலர், அது அவரின் உடல் என கூறியுள்ளனர் எனவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

மறுபுறமாக, பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என வைத்துக் கொண்டாலும், அவரால் பழையபடி புலிகள் இயக்கத்தை மீளக் கட்டமைக்க முடியாது என சித்தார்த்தன் கூறுகின்றார். 'அவருடைய வயது அதற்கு முக்கியமான தடையாக இருக்கும். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலை, அங்குள்ள இளைஞர் களின் மனநிலை, ராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரின் கட்டுப்பாடு போன்றவற்றைத் தாண்டி, அங்கு ஒரு போராட்ட இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது" என்கிறார்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், இந்தியாவின் பின் புலம் இருந்தமையினால்தான் தமிழர் போராட்ட இயக்கங்களை இலங்கையில் கட்டியெழுப்ப முடிந்தது என்று குறிப்பிட்ட அவர், இப்போது இந்தியாவின் நிலைப்பாடு வித்தியாசமாக உள்ளது என்கிறார். 'இனி தமிழர் தரப்பிலிருந்து ஆயுதப் போராட்டம் நடப்பதை ஆதரிப்பதற்கான சமிக்ஞைகளை இந்தியா காட்டாது என நான் நம்புகிறேன்" எனவும் தெரிவித்தார்.

'இந்தியா தற்போது தனது பலத்தை பொருளாதார ரீதியில்தான் காட்ட விரும்புகிறது. தமிழ் நாட்டிலுள் ளவர்களில் குறைந்தளவானவர்களே ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவாக உள்ளனர்.

பெரும்பான்மையானோர் மனதளவில் முழுமையாக மாற்றமடைந்துள்ளார்கள். அங்கு - மேல் நடுத்தர வர்க்கத்தினர் அதிகளவில் உள்ளனர். பொதுவாகவே இந்த வர்க்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவது மில்லை, அக்கறையும் காட்டுவதில்லை" என, தனது கருத்துக்கான நியாயங்களை அவர் முன்வைத்தார்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் - தமிழ் நாட்டு மக்களிடம் ஓர் அனுதாப உணர்வு உள்ளதாக கூறும் சித்தார்த்தன், அவர்களில் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர் என்கிறார். 'இலங்கைத் தமிழ் மக்களுக்கு நல்ல தொரு தீர்வு கிட்ட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இலங்கை தமிழர்கள் ஆயுதப் போராட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு வழங்க மாட்டார்கள்". என்றார்.

இனப் பிரச்சினை விவகாரத்தில் - தமிழர்களுக்கான உடனடித் தீர்வாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் எனக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், '13ஆவது திருத்தமும், மாகாண சபை முறைமையும்தான் தமிழர்களுக்கான தீர்வு என்று நான் கூறவில்லை. இருந்தபோதும், தமிழர்களுக்கு ஓரளவு தீர்வை வழங்கும் வகையில் - அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள விடயமாக 13ஆவது திருத்தமே உள்ளது" என்றார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கே சிங்கள அரசியல்வாதிகளிடம் இவ்வளவு பெரிய எதிர்ப்பு இருக்கும் நிலையில், 70 வருடங்களாக தமிழர்கள் கோரி வரும் - சமஷ்டி அமைப்பை வென்றெடுப்பது எவ்வளவு கடினமான விடயம் என - தங்களுக்குத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'அதற்காக அந்தக் கோரிக்கையை நாம் கைவிடமாட்டோம்" என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன். (பிபிசி)

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் பாடசாலையில் முப்பெரும் விழா

அம்பாறை, மார்ச் 04

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் ஏற்பாட்டில் முப்பெரும் விழா சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், பாரம்பரியக் கலையான பொல்லடி எனும் கோலாட்ட குழுவினரால் அதிதிகள் அழைத்து வரப்பட்டு,

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கன கௌரவம், பாடசாலைக்கான இணையத் தளம் அங்குரார்ப்பணம், ஆங்கில சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு என முப்பெரும் விழாவாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா. கனகசூரியம் பிரதம அதிதியாகவும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம



கணக்காளர் ஏ.எம்.எம். ரபீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளருமான என். எம்.ஏ.மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹரூன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஆர்.முஹம்மட் நிஸ்ஸாட் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# மண்முனை மேற்கு பிரதேச செயலக சந்தை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச் 04



மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட “சிறு சந்தை” எனும் தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டம், உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன் தலைமையில், செயலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த சந்தை நிகழ்வு, மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இதில் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பங்கேற்று, சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், காட்சிப்படுத்தப்பட்ட உற்பத்திகளை கொள்வனவு செய்தனர். (அ)

# தென்னைகளில் வெள்ளை நிற ஈக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

அம்பாறை, மார்ச் 04

ஒலுவில் பிரதேசத்தில் தென்னை மர ஓலைகளில் அதிகரித்துக் காணப்படும் வெள்ளை நிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்து தொடர்பான விழிப்புணவு, ஒலுவில் அன்சாரி ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

ஒலுவில் 5 மற்றும் 6ஆம் பிரிவுகளிலுள்ள பிரதேசங்களில் தென்னை மர ஓலைகளில் அதிகரித்துக் காணப்டும் வெள்ளை நிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்து தொடர்பாக நிந்த



வூர் தென்னை பயிர்ச் செய்கை அதிகார சபை மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து, இது தொடர்பாக விளக்கமளித்தனர்.

தென்னை பயிர்ச்செய்கையின் சபை பிராந்திய முகாமையாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு, நிந்தவூர் தென்னை பயிர் செய்கை சபையின் அலுவலகத்தில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாளிகைக்காடு பள்ளிவாசலுக்கு ரூபா 5 இலட்சம் நிதி அன்பளிப்பு



அம்பாறை, மார்ச் 04

மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை தெற்கு கைத்தொழில் ஊக்கு விப்பு வர்த்தக கூட்டுறவுச் சங்கத்தினால் ரூபா ஐந்து இலட்சம் பணம் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு கடந்த புதன்கிழமை இரவு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்று வரும் புதிய அபிவிருத்தி வேலைகளின் நிர்மாணப் பணிகளுக்கு பள்ளிவாசலின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீமின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தத் தொகை மரைக்காயர் சபை கூட்டத்தின்போது பள்ளிவாசலின், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூரிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## கல்வி tv CHANNEL-1

**04.03.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

**04.03.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலையில் விவசாயிகளுக்கு இலவச டீசல் வழங்கும் நிகழ்வு



திருமலை, மார்ச் 04

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கான சீன நன்கொடையின் கீழான இதய பூர்வமான உதவி எனும் தொனிப்பொருளின் கீழான டீசல் எரிபொருள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை குச்சவெளி பகுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்திற்கு என ஒதுக்கப்பட்ட 299,620 லீற்றர் டீசலில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை 4290 லீற்றர் டீசல் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஒரு ஹெக்ரேயர் விவசாய நிலத்திற்கு 15 லீற்றர் எரிபொருள் எனும் விகிதத்தில் 34,640 பொது மக்களுக்கு இது பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான சீன தூதுவர் கியுய் சென்ஹொங் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம மற்றும் பல அரச அதிகாரிகள் பங்கேற்று பொது மக்களுக்கான எரிபொருளை பகிர்ந்தளித்தனர்.

# கடலில் நின்ற படகு விபத்து

அம்பாறை, மார்ச் 04

காரைதீவுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு ஆழ்கடல் பாரிய படகு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானது.

காரைதீவைச் சேர்ந்த எஸ் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் படகே இவ்விதம் கடலில் சேதத்திற்குள்ளாகியது.

சேதம் எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பாக இன்னும் தெரியவில்லை.

விபத்துக்குள்ளான படகு கடலுக்குள் மூழ்கிய வண்ணம் இருந்தது. இதனை அறிந்த படகு உரிமையாளர் மற்றும் காரைதீவு கடற்படையினர் இணைந்து படகை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

விபத்து தொடர்பாக காரைதீவு பொலிஸிலும் கடற்றொழில் அலுவலகத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (அ)

# கல்முனை மாநகர வரிப்பண மோசடியில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை!

## ஹரீஸ் எம்.பி உறுதி

அம்பாறை, மார்ச் 04

கல்முனை மாநகர சபை மக்கள் வரிப் பணத்தினை மோசடி செய்தவர்களுக்கு எதிராக தயவு தாச்சனையின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தான் பேசியுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கல்முனை மாநகர சபை மக்கள் வரிப் பண அறவீட்டில் இரு உத்தியோகத்தர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ள நிலையில் இவ்விருவரும் பதவியிலிருந்து தற்காலியமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக விரிவான விசாரணையை மேற்கொண்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்முனை மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருடன் தொடராக ஆலோசனை வழங்கியுள்ளேன்.

மேலும் இது தொடர்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண



உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாரை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரை தொடர்பு கொண்டு இம்மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க கூறியுள்ளேன்.

மக்கள் வரிப்பணத்தில் இடம்பெற்ற இந்த மோசடி நடவடிக்கை கல்முனை மாநகர மக்கள் மத்தியில் கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான களவு, மோசடிகளை மூடி மறைக்க நான் உள்ளிட்ட ஏனைய அரசியல் தலைவர்கள் ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை-என்றார். (அ)

# அரசியல் காழ்ப்புணர்ச்சியால் விஷமத்தனமான பிரசாரங்கள்!

## கல்முனை மேயர் கவலை



**நிந்தவூர், மார்ச் 04**

**“கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதிக் கையாடல் தொடர்பில் உரிய நிருவாக மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மக்களால் நிராகரிக்கப்பட்ட சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, உண்மைக்குப் புறம்பாக விஷமத்தனமான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.”**

இவ்வாறு கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விசனம் வெளியிட்டார்.

மாநகர சபை மேயர் அலுவலகத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கெண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதிக்கையாடல் மோசடி விவகாரம் தொடர்பில் நிர்வாக மற்றும் சட்டப்படியான அத்தனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

இந்த மோசடியில் ஈடுபட்ட இரு ஊழியர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், தலைமறைவாகியுள்ள அவர்களிருவரும் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முடியாதவாறும் நடவடிக்ககைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் மாநகர சபையில் உயர் மட்டக் குழு ஒன்றும் விசாரணைகளையும், நடவடிக்கைகளையும் எனது ஆலோசனையில் முன்னெடுத்து வருகின்றது.

இந்த விவகாரத்தில் மேயராகிய நானும், சபை உறுப்பினர்களும் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட சில விசமிகள், எம் மீது கொண்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சில தினங்களாக இந்த விவகாரத்துடன் சம்பந்தப்படுத்தி விஷமத் தனமான பிரசாரங்களை தொடுத்து வருவது கண்டிக்கத் தக்கதாகும்.

தம்மைப் புனிதர்களாகவும், கல்முனையைக் காக்க வந்தவர்களாகவும் மூடிகளைப் போட்டுக் கொண்டு முகநூல்களிலும், வெளிப்பரப்பிலும் இவர்கள் இத்தகைய விசமப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போட முயலும் இப்பேர் வழிகள் என்னையும், உறுப்பினர்களையும் மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரஸின் தலைவரையும், பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸையும்கூட சம்பந்தப்படுத்தி தமது விஷமத்தன பிரசாரத்தை செய்துவருவதை அவதானித்து வருகின்றோம்.

நாம் மக்களுக்காக எமது கடமைகளையும் பொறுப்பேற்று மனச் சாட்சியுடன் செயற்பட்டு வருகின்றோம் மிகப் புனிதமாகவும், எமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம்.

இதனால் தான் எம் மீது சேறு பூசுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் மக்கள் தெளிவாகவேயுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் நடைபெற்றுள்ள நிதிக்கையாடல் மோசடிவிடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் கண்டிப்பான எமது செயற்பாடுகள் தொடரும்-என்றார். (அ-06)

# சீனத் தூதரகத்தின் ஏற்பாட்டில் உலர் உணவுப்பொதி வழங்கல்

திருமலை, மார்ச் 04

சீன - இலங்கை பௌத்த நட்புறவுச் சங்கம் மற்றும் சீன உயர்ஸ்தானிகராலயத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிங்களம், தமிழ் மற்றும் இஸ்லாம் ஆகிய இனங்களை சேர்ந்த 225 வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு நேற்று முன் தினம் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு குச்சவெளி பிச்சமல் விகாரை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது சீன தூதுவர் கிவ் சென்ஹொங், சீனா, இலங்கையின் நண்பன் என்ற அடிப்படையில் பல உதவிகளை செய்து வருவதாகவும், அதன் ஒரு கட்ட உதவியாக இந்த உணவுப்பொதிகளின் விநியோகம் அமைவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கை கடினமான நிலவரங்களை சந்தித்தபோது அதிலிருந்து மீட்சி பெற ஆரம்பத்திலிருந்து இன்று வரை சீனா ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் தேரர்கள், இலங்கைக்கான சீன தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், சீன தூதரக அதிகாரிகள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என். ஜயவிக்ரம, குச்சவெளி பிரதேச செயலாளர் கே. குணநாதன், இலங்கை - சீன பௌத்த நட்புறவுச் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# இலவச ஆயுர்வேத வைத்திய முகாம்

அம்பாறை, மார்ச் 04

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அமைப்பின் ஏற்பாட்டில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் சாய்ந்தமருது சுகாதார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் நெறிப்படுத்தலில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் எம்.ஐ. சம்சுடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் மருத்துவர் ஏ.டவுள்யூ. வாஜீத், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி மருத்துவர் ஏ. எம். நபீல், சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் எஸ்.எம்.றிஷாட், தலைமை பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ மஜீத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜஃபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வைத்திய முகாமில் 06 பேர் கொண்ட ஆயுர்வேத வைத்திய குழாம் மூலம் பொதுமக்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தொற்ற நோய்கள் தொடர்பாக நோயாளிகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டு மாத மாதம் கிளினிக் வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன. (அ)

# உக்ரைனில் ரஷ்யாவின் சித்திரவதை முகாம்கள்!

## வெளியானது அதிர்ச்சி தகவல்

கீவ், மார்ச் 04

**உக்ரைனுடனான போரின் தொடக்கத்தில் கைப்பற்றி, 8 மாதங்களாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கெர்சன் நகரில் சித்திரவதை முகாம்களை ரஷ்யா அமைத்துள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.**



உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய போரானது, ஓராண்டை கடந்து நீண்டு கொண்டே செல்கின்றது. இந்த நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு பிப்ரவரியில் போரின் தொடக்கத்தின்போது கெர்சன் நகரை ரஷ்யா கைப்பற்றியது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் தொடக்கம் வரையிலான 8 மாதங்களாக அந்நகரை தனது கட்டுப்பாட்டில் ரஷ்யா வைத்துள்ளது.

அப்போது, கெர்சன் நகரில் சித்திரவதை முகாம்களை ரஷ்யா அமைத்துள்ளது என கூறப்படுகின்றது.

உக்ரைன் மற்றும் உக்ரைனுடன் தொடர்பில் உள்ளவர்கள் அந்த முகாம்களில் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோரும் அடைக்கப்பட்டுள்ளனர்.

கெர்சன் நகர் ரஷ்யா கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னர், தெருக்களில் நடந்து சென்ற பலர் ரஷ்ய வீரர்களால் பிடிபட்டுள்ளனர்.

அவர்களது மொபைல் போன்களில் உக்ரைனை சேர்ந்தவர்கள் என்பதற்கு ஆதரவான தடயங்கள் காணப்பட்டதும் கைது செய்யப்பட்டுள்ளனர் என கைதிகளாக அடைப்பட்ட பலர் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் கெர்சன் நகரை உக்ரைன் இராணுவம் தன்வசப்படுத்தியது. அதன்பின்பே, சித்ரவதை முகாம்கள் பற்றிய விவரங்கள தெரிய வந்துள்ளன. இது போன்று கெர்சனில் 20 சித்திரவதை அறைகள் காணப்பட்டுள்ளன.

ரஷ்ய படைகள் இவற்றை நிறுவி, நிர்வாகம் செய்து, முகாம்களை அமைக்க நிதியுதவியும் செய்த விவரங்கள் இங்கிலாந்து சட்டத்தரணி வெய்னே ஜோர்டாஷ் தலைமையிலான குழு மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதன்படி, உயிர் தப்பிய ஆயிரம் பேரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மேற்கூறிய பல விவரங்கள் தெரிய வந்துள்ளன.

இதன்படி, உக்ரைனின் தேசிய மற்றும் கலாசார அடையாளங்களை அழிக்க திட்டமிடப்பட்டுள்ளது என குழு தலைவர் வெய்னே கூறியுள்ளார்.

உக்ரைனில் சித்ரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள், அடித்தும், மின்சாரம் பாய்ச்சி அதிர்ச்சி ஏற்படுத்தும் கொடுமைகளும் நடந்துள்ளன.

ரஷ்ய ஆதரவு கோஷங்கள், கவிதைகள் மற்றும் பாடல்களை கற்று, உச்சரிக்க கட்டாயப்படுத்தியும் உள்ளனர்.

இந்த முகாம்களில் உள்ள 400 பேரை காணவில்லை. அவர்கள் உயிரிழந்து விட்டனரா? அல்லது ரஷ்யாவுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டனரா? என்பதும் தெளிவாக தெரியவில்லை என ஜோர்டாஷ் கூறியுள்ளார். (அ)

# நித்தியானந்தாவின் பிரதிநிதிகள் ஐ.நாவில் பேசியவை புறக்கணிப்பு

ஜெனிவா, மார்ச் 04

நித்தியானந்தாவின் பிரதிநிதிகள் பேசிய கருத்துகள் புறக்கணிக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பாலியல் புகாரில் சிக்கிய சாமியார் நித்தியானந்தா இந்தியாவை விட்டு தப்பிச் சென்றார். அவர் தனது ஆசிரமத்தை 'கைலாசா' என்ற தனி நாட்டில் உருவாக்கியுள்ளதாக கூறி வருகிறார். ஆனால், இந்த இடம் பற்றி பல ஊகங்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், ஜெனிவாவில் கடந்த மாதம் 24ஆம் திகதி ஐ.நா அமைப்பின் பொருளாதார, சமூக, மற்றும் காலாசார உரிமைகள் குழு கூட்டம் நடந்துள்ளது.

இதில் 'கைலாசா குடியரசு' சார்பில் நித்தியானந்தாவின் பிரதிநிதிகளாக பெண்கள் சிலர் கலந்துகொண்டனர். இந்த போட்டோக்கள் நித்தியானந்தாவின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 'முடிவெடுக்கும் விஷயங்களில் பெண்களுக்கு சம உரிமை'என்ற தலைப்பில் நடந்த விவாதத்தில் அனைத்து மகளிர் குழு பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் நிலையான வளர்ச்சிக்கு கைலாசா எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அந்த பெண் பிரதிநிதி பேசினார். உணவு, இருப்பிடம், உடை, கல்வி, மருத்துவ சிகிச்சை போன்றவை கைலாசாவில் இலவசமாக வழங்கப்படுகிறது. பழமையான இந்துமத பாரம்பரியத்தை மீண்டும் கொண்டு வர விரும்பும் இந்து மத தலைவர் நித்யானந்தாவுக்கு தொந்தரவு அளிக்கப்படுகிறது. சொந்த நாட்டிலேயே அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். இந்த தொந்தரவை தடுத்த நிறுத்த தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

ஐ.நா அமைப்பில் 193 நாடுகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் கைலாசா இடம் பெறவில்லை. இதில் இடம் பெற ஐ.நா பாதுாப்பு சபை மற்றும் பொது சபை அனுமதி வேண்டும். ஆனால் ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு, தங்கள் கூட்டத்தில் எந்த அமைப்பை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை பேச அனுமதிக்கிறது. இதை பயன்படுத்தி கைலாசாவை ஐ.நா அங்கீகரித்தது போல் பொய்யான தோற்றத்தை நித்தியானந்தா ஏற்படுத்தியிருந்தார்.

இதனிடையே, கற்பனையான நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை எப்படி அனுமதி அளித்தது போன்ற கேள்விகள் பரவலாக எழுந்தன.

இதற்கு ஐ.நா., ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு, தங்கள் கூட்டத்தில் எந்த அமைப்பை சேர்ந்தவர்களுக்கு பேச அனுமதி அளிக்கும் என்று தெரிவித்தது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் பேசும்போது, “கைலாசாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் பெப்ரவரி மாதம் நடந்த ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட தலைப்புடன் சற்றும் தொடர்பில்லாத கருத்து நித்தியானந்தாவின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. அவர்களின் கருத்து ஐக்கிய நாடுகள் சபையால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டது” என்று தெரிவித்திருக்கிறார். (அ)

## உலகின் முக்கிய தொழில்நுட்பங்களில்

# மேற்கு நாடுகளை விட சீனாவே முன்னணியில்!

நியூயோர்க், மார்ச் 04

விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றங்களுக்கான போட் டியில் மேற்கத்திய ஜனநாயக நாடுகள் பின்தங்கியுள்ள நிலையில், 44 முக்கியமான தொழில் நுட்பங்களில் 37 இல் சீனா உலகை முன்னிலைப் படுத்துகிறது என்று ஆஸ்திரேலிய சிந்தனைக் குழுவின் அறிக்கை கண்டறிந்துள்ளது.



சீனா, ஏற்கனவே பாதுகாப்பு, விண்வெளி, ரோபாட்டிக்ஸ், ஆற்றல், சுற்றுச்சூழல், உயிரி தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, மேம்பட்ட பொருட்கள் மற்றும் முக்கிய குவாண்டம் தொழில்நுட்பம் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்தி, உலகின் தலைசிறந்த தொழில்நுட்ப வல்லரசாக மாறும் நிலையில் உள்ளது. அவுஸ்திரேலிய மூலோபாய கொள்கை நிறுவனம் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட கிரிட்டிகல் டெக்னாலஜி டிராக்கரின் படி, சீனாவின் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய பகுதிகளில் ட்ரோன்கள், இயந்திர கற்றல், மின்சார பேட்டரிகள், அணுசக்தி, ஒளிமின்னழுத்தங்கள், குவாண்டம் சென்சார்கள் மற்றும் முக்கியமான தாதுக்கள் பிரித்தெடுத்தல் ஆகியவை அடங்கும்.

சில துறைகளில் சீனாவின் ஆதிக்கம் மிகவும் வேரூன்றியுள்ளது, அவுஸ்திரேலிய மூலோபாய கொள்கை நிறுவனத்தின் படி, சில தொழில்நுட்பங்களுக்கான உலகின் முதல் 10 முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள் அனைத்தும் நாட்டில் அமைந் துள்ளன.

அவுஸ்திரேலிய, யுனைடெட் கிங்டம் மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் மற்றும் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் தொழில்கள் உள்ளிட்ட தனியார் துறை ஆதாரங்களில் இருந்து நிதியுதவி பெறும் அவுஸ்திரேலிய மூலோபாய கொள்கை நிறுவனத்தின் படி, விண்வெளி ஏவுதள அமைப்புகள் மற்றும் குவாண்டம் கம்பியூட்டிங் உட்பட ஏழு முக்கியமான தொழில் நுட்பங்களில் அமெரிக்கா முன்னணியில் உள்ளது.

44 தொழில்நுட்பங்களில் 29ல் முதல் ஐந்து நாடுகளில் இங்கிலாந்தும் இந்தியாவும் உள்ளன, தென் கொரியா மற்றும் ஜேர்மனி முறையே 20 மற்றும் 17 தொழில்நுட்பங்களில் முதல் ஐந்து இடங்களில் உள்ளன என்று அறிக்கை கூறுகிறது. (அ)

# அன்ரனி பிளிங்கன் சீனாவுக்கு எச்சரிக்கை!

புதுடில்லி, மார்ச் 04

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் ஜி20 மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காக இந்தியா சென்றடைந்தார்.

இந்த விஜயத்தின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் அன்டனி பிளிங்கன் ஆகியோருக்கிடை யில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, செய்தியாளர்களை சந்தித்த அன்டனி பிளிங்கன், ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து சீனா பரிசீலித்து வருவதாகவும், அது இருதரப்பு உறவுகளை பாதிப்பதுடன், பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் - ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு சீனா ஆதரவளித்ததுடன், ரஷ்யாவுக்கு உதவும் வகையில் சீனா செயல்பட்டு வருகின்றது.

இது இருதரப்பு உறவில் கடுமையான பிரச்னையாக இருக்கும் எனவும், பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சோனியா காந்தி வைத்தியசாலையில்

புதுடில்லி, மார்ச் 04



காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி டில்லியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும், அவரது உடல் நிலை சீராக இருப்பதாகவும் வைத்திய சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் 9 விக்கெட்களால் ஆஸி. வெற்றி!

இந்தூர், மார்ச் 04

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியை 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வென்றுள்ளது.

இந்தூரில் நடைபெற்ற டெஸ்டில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 109 ஓட்டங்களும் 2ஆவது இன்னிங்ஸில் 163 ஓட்டங்களும் எடுத்தது. ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்கள் எடுத்தது. ஆஸி. அணி 3ஆவது டெஸ்டில் வெற்றி பெற 76 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நேற்று ஆட்டம் தொடங்கியவுடன் முதல் ஓவரிலேயே கவாஜாவின் விக்கெட்டை வீழ்த்தினார் அஸ்வின். அதன்பிறகு ட்ராவிஸ்



ஹெட்டும் லபுஷானும் பொறுப்புடன் விளையாடி மேலும் விக்கெட்கள் விழாமல் பார்த்துக் கொண்டார்கள்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி, 18.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 78 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியை அடைந்தது. ஹெட் 49, லபுஷான் 28 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள்.

இந்த டெஸ்டில் மொத்தமாக 11 விக்கெட்கள் எடுத்த லயன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

3ஆவது டெஸ்டை வென்றதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு அவுஸ்திரேலிய அணி தகுதி பெற்றுள்ளது. டெஸ்ட் தொடரில் 2-1 என இந்தியா முன்னிலை வகிக்கிறது.

4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட், அஹமதாபாத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி தொடங்குகிறது.

# டபிள்யூ. பி. எல். ரி-20 தொடர் இன்று மும்பையில் ஆரம்பம்

மும்பை, மார்ச் 04

ஐ. பி. எல். 20 ஓவர் போட்டியை போன்று பெண்களுக்கு பிறிமீயர் லீக் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) முடிவு செய்தது. இதன்படி முதலாவது மகளிர் பிறிமீயர் லீக் (டபிள்யூ.பி.எல்.) 20 ஓவர் போட்டி மும்பையில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் டில்லி கப்பிடல்ஸ், குஜராத் ஜெயன்ட்ஸ், மும்பை இந்தியன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூார், உ. பி. வோரியர்ஸ் ஆகிய 5 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 2 முறை



மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் “பிளே ஓவ்“ சுற்றுக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அவுஸ்திரேலிய அணி தகுதி

டுபாய், மார்ச் 04

இந்தியாவுக்கு எதிராக இந்தூரில் நடந்த மூன்றா வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக் கெட்களால் வெற்றியீட்டியது.

இந்த வெற்றியுடன் 2021 - 2023 சுழற்சிக்கான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட அவுஸ்திரேலியா தகுதிபெற்றது.

இந்தூரில் அடைந்த தோல்வியால் இறுதி ஆட்ட வாய்ப்புக்காக இந்தியா காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

நேற்றைய வெற்றியுடன் அவுஸ்திரேலியா 68.52 சதவீத புள்ளிகளுடன் அணிகள் நிலையில் அசைக்க முடியாத முதலாம் இடத்தைப் பெற்று உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான தகுதியை உறுதி செய்தது.

3ஆவது டெஸ்டில் தோல்வியடைந்த இந்தியாவின் சதவீத புள்ளிகள் 60.29 ஆக அமைந்துள்ளது.

எனவே, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றால் மாத்திரமே உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைக்கும். இலங்கை 53.33 சதவீத புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் இருக்கிறது.

# பங்களிப்பு செய்த அணியினருக்கு தங்க ஐபோன் வழங்கிய மெஸ்ஸி!

புவனஸ்அயர்ஸ், மார்ச் 04

உலகக் கிண்ணத்தை வெற்றிபெறத் தனக்கு உறுதுணையாக இருந்த வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் என ஆர்ஜென்ரீனா அணியைச் சேர்ந்த 35 பேருக்குத் தங்கத்திலான ஐ போன்களை பரிசளிக்கவுள்ளார் உதைபந்தாட்ட நட்சத்திரம் மெஸ்ஸி.

கட்டாரில் நடைபெற்ற உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா அணி வென்றது. இறுதிச் சுற்றில் பிரான்ஸை 4-2 என பெனால்டியில் தோற்கடித்து சம்பியனானது.

1978, 1986இற்கு பிறகு ஆர்ஜென்ரீனா அணி வென்ற 3ஆவது உலகக் கிண்ணம் இது. மெஸ்ஸி முதன்முறையாக உலகக் கிண்ணத்தை ஏந்திய தருணமும் இம்முறைதான் அமைந்தது. போட்டியின் சிறந்த வீரராக மெஸ்ஸி தெரிவானார்.

இந்நிலையில் உலகக் கிண்ணத்தை முதன்முறையாக வெல்லத் தனக்கு உதவிய ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள், பயிற்றுவிப்பாளர்களுக்கு புதுமையான முறையில் பரிசளிக்க முடிவு செய்துள்ளார் மெஸ்ஸி. இதையடுத்து 35 நபர்களுக்குப் பரிசளிப்பதற்காகத் தங்கத்திலான ஐபோன் 14 வகை கைபேசிகளை கொள்வனது செய்துள்ளார்.

இதற்கான செலவு கிட்டத்தட்ட சுமார் 7.7 கோடி ரூபாய் என அறியப்படுகிறது. மெஸ்ஸி பரிசளிக்கும் தங்கத்தாலான ஐபோனில் குறிப்பிட்ட வீரரின் பெயர், சீருடை எண், ஆர்ஜென்ரீனா அணியின் இலச்சினை ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஐடிசைன் கோல்ட் என்கிற நிறுவனம் மெஸ்ஸி விரும்பிய ஐபோன்களை பிரத்யேகமாக வடிவமைத்துள்ளது. (ஐ)





# ஐ. பி. எல். தொடருக்காக டோனி சென்னை வந்தார்

சென்னை, மார்ச் 04

எதிர்வரும் ஐ. பி. எல். 2023 தொடருக்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி, சென்னை சென்றுள்ளார்.

அவருக்கு விமான நிலையத்தில் தடபுடலான வரவேற்பு கொடுக்கப்பட்டது. அவர் சென்னைக்கு வருகை தரும் வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

வரும் 31ஆம் திகதி ஐ. பி. எல். தொடர் தொடங்கவுள்ளது. முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை செய்ய உள்ளன. இந்நிலையில், இதற்கு தயாராகும் வகையில் டோனி, சென்னை வந்துள்ளார்.

அடுத்து வரும் நாட்களில் அவர் சென்னையில் பயிற்சி மேற்கொள்வார் என தெரிகிறது. கடந்த சில வாரங்களாகவே டோனி, ராஞ்சியில் ஐ. பி. எல். தொடரில் பயிற்சி மேற்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. கொரோனா பரவல் காரணமாக கடந்த சில சீசன்களாக ஐ. பி. எல் போட்டிகள் குறிப்பிட்ட சில மைதானங்களில் மட்டுமே நடைபெற்றன. இந்த சூழலில் சென்னை மண்ணில் எதிர்வரும் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி விளையாட உள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் மொத்தம் 7 போட்டிகளில் சி. எஸ். கே. விளையாடவுள்ளது. தனது கடைசி இருபது - 20 கிரிக்கெட் போட்டி சென்னை மண்ணில்தான் அரங்கேறும் என டோனி முன்னர் தெரிவித்திருந்தார். இருந்தும் அது எப்போது என்பது இப்போதைக்கு மர்மமாகவே உள்ளது.

# இரண்டு நாடுகளின் டெஸ்ட் நதன் லயன் புதிய சாதனை!



இந்தூர், மார்ச் 04

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் இந்திய அணியை வீழ்த்தக் காரணமாக இருந்தவர் நதன் லயன். சுழல்பந்து வீரரான இவர் 23.3 ஓவர்கள் வீசி 64 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்களை வீழ்த்தினார். இதன்மூலம் லயன் புதிய வரலாறு படைத்தார்.

உமேஷ் யாதவ் விக்கெட்டை கைப்பற்றியபோது அவர் கும்ப்ளேயை முந்தினார். இரு நாடுகள் இடையேயான டெஸ்ட் தொடரில் கும்ப்ளே 111 விக்கெட் எடுத்து (20 போட்டிகள்) முதல் இடத்தில் இருந்தார். அவரை முந்தி புதிய சாதனை புரிந்தார். லயன் 25 டெஸ்டில் 113 விக்கெட்கள் வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார்.

கும்ப்ளே 111 விக்கெட்களுடன் 2ஆவது இடத்திலும் அஸ்வின் 106 விக்கெட்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளார். மேலும், இந்தியாவுக்கு எதிராக அதிக விக்கெட் கைப்பற்றிய சுழல்பந்து வீரரான முரளிதரனையும் லயன் முந்தினார். (ஐ)

# மக்களை பாதுகாக்கும் வகையில் வரித்திருத்தம் அமையவேண்டும்!

## சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 04

பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமைய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கிளையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமையப்பெற வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கிளையின் சிரேஷ்ட பிரதானி பீற்றர் பிரேயர், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கிளையின் தலைமை அதிகாரி மசாகிரோ நொசாகி ஆகியோர் ஒன்றிணைந்த அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்வதற்கு புதிய வருமான வரி உதவி செய்யும்.

சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய வருமான வரி அமைந்துள்ளது.

புதிய வரி சீர்திருத்தம் தற்போதுள்ள நிலைமையை சீர் செய்ய உதவும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

# குளங்களை புனரமைப்பதற்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, மார்ச் 04

பல தசாப்தங்களாக புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்ட 30 குளங்களை இந்த வருடத்துக்குள் புனரமைக்க விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், குருநாகல், புத்தளம், பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தக் குளங்களின் கீழ் நெல் பயிரிடுவதற்குப் பதிலாக மரக்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடுவதற்கு முன்னுரிமை வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.(அ)

# சிறப்புற நடந்த ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் வீதியோட்டம்





யாழ்ப்பாணம், மார்ச் 04

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான வீதியோட்ட நிகழ்ச்சி நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.க. கணபதிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி திரு எஸ் பரமானந்தம், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ.கருணலிங்கம், லயன் டாக்டர் வி.தியாகராஜா, முன்னாள் விரிவுரையாளர் வி. எஸ். குணசீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஆண் ஆசிரிய மாணவர்கள் கலாசாலை முன்றிலில் இருந்து புறப்பட்டு இராச வீதி வழியாக நல்லூர் கோவிலை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக இருபாலை சந்தியை அடைந்து கலாசாலையை வந்தடைந்தனர்.

பெண்ஆசிரிய மாணவர்கள் கலாசாலை முன்றிலிருந்து புறப்பட்டு இராஜ வீதி வழியாக இராமசாமி பரிகாரி சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதி வழியாக கல்வியங்காட்டுச் சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக இருபாலை சந்தியை அடைந்து கலாசாலை வாயிலை வந்தடைந்தனர்.

நாற்பது வயதுக்கும் ஐம்பது வயதுக்கும் இடைப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் இவ்வீதியோட்டத்தில் பங்கேற்றமையை பலரும் பாராட்டி வாழ்த்தினர். (அ)

# 'இயர்போன்' பயன்படுத்துவதனால் குழந்தைகளின் காதுகளுக்கு பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 04

குழந்தைகள் இணையத்தில் கல்வி கற்கும் போது 'இயர் போன்' பயன்படுத்துவதால் அவர்களின் காதுகளுக்கு பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண் மற்றும் காது தொடர்பில் விசேட நிபுணர் வைத்தியர் சந்திரா ஜயசூரிய இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குழந்தைகள் அடிக்கடி இயர் போன் பயன்படுத்துவதால், காதுக்குள் காது மெழுகு தள்ளப்படுவதாகவும், இதனால் காது அழுகல், பூஞ்சை, காது டிரம் ஆகிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்று காதில் பாதிப்பு ஏற்படுவதால், காது கேளாமை ஏற்படும் எனவும், எனவே கவனமாக இருக்கவேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காதில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது செவித்திறன் குறைபாடு ஏற்பட்டாலோ தாமதிக்காமல் மருத்துவரை அணுகுமாறு கண் மற்றும் காது தொடர்பில் விசேட நிபுணர் வைத்தியர் சந்திரா ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். (அ)

# கனடாவில் வேலை பெற்றுத் தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மார்ச் 04

கனடாவில் குடியுரிமை மற்றும் வேலை பெற்றுத் தருவதாக கூறி பல்வேறு நபர்களிடம் பணத்தை மோசடி செய்த சந்தேகநபர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்தே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். (அ)

# பற்றாக்குறையாகவுள்ள 37 மருந்துகளை வழங்குகின்றது உலக சுகாதார நிறுவனம்

கொழும்பு, மார்ச் 04

நாட்டில் பற்றாக்குறையாக உள்ள 37 வகையான மருந்துகளை உடனடியாக வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக் கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்து இந்த கலந்துரையாடல் ஜெனிவாவில் இடம்பெற்றதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறை மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு இதன் போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# சுகாதார அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதற்குத் தயார்!

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, மார்ச் 04

தனக்கு சுகாதார அமைச்சு பதவி வழங்கப்படும் பட்சத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை தணிக்க தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனாரத்ன, புற்றுநோயாளிகள் உட்பட உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் பலர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

நான் அடக்குமுறைக்கு எதிரானவன். தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது அனைவரினதும் பொறுப்பு-என்றார். (அ)

# 12 இலட்ச ரூபாய் பெறுமதியான வலைகள் அத்துமீறிய தமிழக மீனவர்களினால் நாசம்!



யாழ்ப்பாணம், மார்ச் 04

சுழிபுரம் மேற்கு சவுக்கடி கடற்பரப்பில் கடற்றொழிலுக்கு சென்ற மூன்று மீனவர்களின் வலைகளை தமிழக கடற்தொழிலாளர்களின் இழுவை மடிப் படகுகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக கடற்தொழி லாளர்களின் இழுவைமடிப் படகுகளால் யாழ்ப்பாண கடற்தொழிலாளர்களின் வலைகள் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை மூன்று மீன வர்களின் சுமார் 12 இலட்சம் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பில் பாதிக்கப்பட்ட கடற்தொழி லாளர்களினால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## தேர்தல்...

கூறியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்றைய தினம் திருகோணமலை விமானப்படை தளத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசமைப்பைப் பாதுகாப்பதும், நாட்டைப் பாதுகாப்பதும் உங்கள் (படைகளின்) பொறுப்பாகும். ஏனெனில், நாடு இல்லாமல் அரசமைப்பு இல்லை. ஒரு நாடு இல்லாமல், அரசமைப்பு வெறும் காகிதத் துண்டாகவே இருக்கும். ஒரு நாடு இருப்பதாலேயே அரசமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நமது நாட்டின் அரசமைப்பின் முதல் சரத்து "இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அரசமைப்பு இருப்பது குடியரசுக்காகத்தான். நாட்டின் ஒற்றையாட்சி பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அத்தியாயம், மக்கள் இறையாண்மையை செயல்படுத்தும் நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் நமது தேசிய கீதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. மற்ற அனைத்து அத்தியாயங்களும் இவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவே உள்ளன. அப்படியானால், நாம் அதன்படி செயல்பட வேண்டும். முதலில் நாட்டை பாதுகாக்க வேண்டும். அதற்கு நாம் ஓர் இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாடாக இருக்க வேண்டும்.

இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாட்டை அச்சுறுத்தும் வகையில் எதுவும் நடக்க இடமளிக்கக் கூடாது. அது நமது முக்கிய கடமை. அங்கு நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க, இந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு 1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அச்சுறுத்தலுக்கு உள்ளானது. அந்த சந்தர்ப்பத்தில் முப்படையினரும் பொலிஸாரும் உயிர்த் தியாகம் செய்து அதனைப் பாதுகாத்தனர். ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால் நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நாடு என்ற வகையில் நாம் ஒரு தனியாக எழுந்து நிற்க வேண்டுமாயின், இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் போன்று அனைத்து மதத்தினரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நாம் அனைவரும் நமது கலாசாரத்தையும் மதத்தையும் பாதுகாக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

ஓர் அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகிறது அல்லது மாற்றப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தல் இல்லாமல் ஆட்சி மாற்றம் சாத்தியமில்லை. வீதிகள் (போராட்டம்) என்பது பாராளுமன்றத்திற்கான மாற்று வழியல்ல. கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பாராளுமன்றம் இல்லாத நாடுகள் அராஜக நாடுகளாக மாறலாம். ஏனெனில், பாராளுமன்றம் இல்லையென்றால் சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லாமல் போய்விடும்.

இதேபோன்று, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடுகளும் அராஜகமாகின்றன. எனவே, ஒரு நாட்டின் அரசமைப்பையும் பொருளாதாரத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய...

தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரதிநிதிகளின் நல்லெண்ணப் பேச்சின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர், இந்திய மீனவர்கள் நாட்டுப் படகுகளில் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்ற தகவல்கள் வெளியானது. இந்த நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதிமொழியை அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கச்சதீவு...

திருவிழா நடைபெற்றது.

இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியை தொடர்ந்து திருவிழா நிறைவடையும். (ஐ-03)

## 9ஆம் திகதி...

திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நேற்று காலை முதல் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இதைத் தொடர்ந்தே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொருள்களின்...

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி தற்போது உயர்வடைந்துள்ளது. நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்த ஒரு சில கடுமையான தீர்மானங்களால் இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது. ரூபாயின் பெறுமதியை நிலையான தன்மையில் பேணும் பட்சத்தில் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இரு தரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சு சாதகமாக உள்ளன. இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை முழுமையாக வரவேற்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் நாட்டின் கடன் நிலை நிலைபேறான தன்மையில் பேணப்படும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை. தற்போதைய வாழ்க்கை செலவுகள் ஒட்டுமொத்த தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் பாரம்பரிய அரசியல் முறைமைகள் மற்றும் அடிப்படை கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்க முடியாது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையுமே தவிர குறைவடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதால் அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது - என்றார்.

# வவுனியா மருத்துவமனை சிற்றூழியர்கள் போராட்டம்



வவுனியா, மார்ச் 04

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று மதியம் 12.30 மணியளவில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் "முறையற்ற வரி அதி கரிப்பை நிறுத்து", "முறையற்ற நியமனத்தை வழங்குவதை நிறுத்து", "வாழ்வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தை குறை", "ஊழியர் பற்றாக் குறையை உடன் நிவர்த்தி செய்", போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மருத்துவமனையின் நுழைவாயில் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஐ)

கடலட்டைப் பண்ணைகள் மூலம் 7ஆயிரத்து 700 மில்லியன் டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது" என்று கடற்றொழில் அமைச்சர் என்.கே. டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என நேற்று வெளியான செய்தியில் '7ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய்' வருமானமாகக் கிடைத்தது என்பதே சரியானது.

- ஆசிரியர்.

## தேர்தலை...

திகதியை தேர்தல் ஆணைக்குழு இன்று (நேற்று) தீர்மானிப்பதாக அறிவித்திருந்தது. இருந்தபோதும் தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பது தெளிவாக தெரிகிறது.

வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் அபாயத்தில் நாம் இருக்கிறோம். வரையறைகளை அமைத்து, அதற்கமைய மீண்டும் வேட்புமனு கோருவதற்கே அதிக வாய்ப்பு காணப்படுகிறது. அத்தோடு இதனுடன் இணைந்ததாகவே தேர்தல் மீளாய்வுக் குழு இருக்கிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் பல மாதங்கள் அல்லது ஒரு வருடமேனும் பிற்போடப்படும் அவதான நிலையே இருக்கிறது.

என்றாலும், இந்த இரண்டு குழுக்களையும் இணைக்கும் முயற்சியிலேயே நாங்கள் இருக்கிறோம். தொகுதிகள் குறைவடைவது சாதகமாக இருந்தாலும், இதன் காரணமாக இந்த தேர்தல் கால வரையறை இல்லாமல் போகும் நிலை இருக்கிறது. இது பாரதூரமான விடயம்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலை திகதியின்றி ஒத்திவைப்பதற்கும் அவர்கள் எதிர்பார்க்கும் தேர்தல் வரும் வரை இந்த தேர்தலை பிற்போடுவதற்குமே அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் மோசமான முறையில் தலையீடு செய்துவரும் நிலையே தற்போது இருக்கிறது. அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றால் அரசாங்கத்துக்கு தோல்வி ஏற்படும் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டியதில்லை.

தேர்தலில் அரசாங்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், அதனால் அரசாங்கத்தை கொண்டு செல்வதற்கு எந்த தடையும் இதன் மூலம் ஏற்படப் போவதில்லை.

என்றாலும், தேர்தல் பெறுபேறுகள் எதுவாக இருந்தாலும், அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமையை பயன்படுத்துவதற்கு இடமளிக்காவிட்டால், இதனால் ஏற்படும் பெறுபேறு இதனை விட மோசமானதாக இருக்கும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்களின் நிலைப்பாட்டை அமைச்சரவையின் தீர்மானம் மூலம் கட்டுப்படுத்த முடியும் என அரசாங்கம் நினைக்குமாயின், அது அரசாங்கத்தின் முட்டாள்தனமாகும் - என்றார். (ஐ)

## தேர்தலுக்காக...

அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று கோரி ரஞ்சித் மத்தும பண்டார இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எங்களை...

தொழிலை நிறுத்த வேண்டும். அதனை நிறுத்தி இரு வருடங்களுக்கு பின்னர், நாட்டுப் படகுகளில் இலங்கை கடல்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கலாம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேலும், இழுவைமடித் தொழிலை தடை செய்யுமாறு வலியுறுத்தி இந்திய துணைத் தூதரகத்தையும் கடற்றொழில் அமைச்சையும் முடக்கிப் போராட்டத்தை மேற்கொள்வோம் என்றும் மீனவர்கள் கூறினர்.

நேற்றைய தினம் இலங்கை - இந்திய மீனவர் பிரதிநிதிகள் இடையிலான நல்லெண்ண பேச்சு நேற்று கச்சதீவில் நடைபெற்றது. கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தப் பேச்சு நடைபெற்றது. இதில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் பிரதிநிதிகளும் யாழ். மாவட்ட கடற்றொழில் சம்மேளனங்களின் சமாசத் தலைவரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக கட்சியின் தமிழ்நாடு கடற்றொழிலாளர்களின் தலைவரான எம். சி. முனுசாமி தலைமையிலான மீனவர் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

வடக்கு மீனவர் பிரதிநிதிகளின் கண்ணீர் கோரிக்கையை தொடர்ந்து கருத்து வெளியிட்ட இந்திய மீனவர் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில இழுவை மடித் தொழிலுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. இழுவைமடித் தொழிலில் யாரும் ஈடுபடுவதில்லை. காரைக்காலில் மட்டுமே இழுவை மடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடனும் விரைவில் - ஒரு வாரத்துக்குள் முடிவு ஒன்றை அறிவிக்கிறோம் என்று இந்திய மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ - 03)

## தேர்தல்...

கூறியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்றைய தினம் திருகோணமலை விமானப்படை தளத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசமைப்பைப் பாதுகாப்பதும், நாட்டைப் பாதுகாப்பதும் உங்கள் (படைகளின்) பொறுப்பாகும். ஏனெனில், நாடு இல்லாமல் அரசமைப்பு இல்லை. ஒரு நாடு இல்லாமல், அரசமைப்பு வெறும் காகிதத் துண்டாகவே இருக்கும். ஒரு நாடு இருப்பதாலேயே அரசமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நமது நாட்டின் அரசமைப்பின் முதல் சரத்து "இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அரசமைப்பு இருப்பது குடியரசுக்காகத்தான். நாட்டின் ஒற்றையாட்சி பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அத்தியாயம், மக்கள் இறையாண்மையை செயல்படுத்தும் நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் நமது தேசிய கீதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. மற்ற அனைத்து அத்தியாயங்களும் இவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவே உள்ளன. அப்படியானால், நாம் அதன்படி செயல்பட வேண்டும். முதலில் நாட்டை பாதுகாக்க வேண்டும். அதற்கு நாம் ஓர் இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாடாக இருக்க வேண்டும்.

இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாட்டை அச்சுறுத்தும் வகையில் எதுவும் நடக்க இடமளிக்கக் கூடாது. அது நமது முக்கிய கடமை. அங்கு நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க, இந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு 1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அச்சுறுத்தலுக்கு உள்ளானது. அந்த சந்தர்ப்பத்தில் முப்படையினரும் பொலிஸாரும் உயிர்த் தியாகம் செய்து அதனைப் பாதுகாத்தனர். ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால் நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நாடு என்ற வகையில் நாம் ஒரு தனியாக எழுந்து நிற்க வேண்டுமாயின், இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் போன்று அனைத்து மதத்தினரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நாம் அனைவரும் நமது கலாசாரத்தையும் மதத்தையும் பாதுகாக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

ஓர் அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகிறது அல்லது மாற்றப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தல் இல்லாமல் ஆட்சி மாற்றம் சாத்தியமில்லை. வீதிகள் (போராட்டம்) என்பது பாராளுமன்றத்திற்கான மாற்று வழியல்ல. கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பாராளுமன்றம் இல்லாத நாடுகள் அராஜக நாடுகளாக மாறலாம். ஏனெனில், பாராளுமன்றம் இல்லையென்றால் சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லாமல் போய்விடும்.

இதேபோன்று, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடுகளும் அராஜகமாகின்றன. எனவே, ஒரு நாட்டின் அரசமைப்பையும் பொருளாதாரத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய...

தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரதிநிதிகளின் நல்லெண்ணப் பேச்சின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர், இந்திய மீனவர்கள் நாட்டுப் படகுகளில் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்ற தகவல்கள் வெளியானது. இந்த நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதிமொழியை அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கச்சதீவு...

திருவிழா நடைபெற்றது.

இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியை தொடர்ந்து திருவிழா நிறைவடையும். (ஐ-03)

## 9ஆம் திகதி...

திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நேற்று காலை முதல் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இதைத் தொடர்ந்தே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆணைக்குழுவில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொருள்களின்...

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி தற்போது உயர்வடைந்துள்ளது. நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்த ஒரு சில கடுமையான தீர்மானங்களால் இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது. ரூபாயின் பெறுமதியை நிலையான தன்மையில் பேணும் பட்சத்தில் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சு சாதகமாக உள்ளன. இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை முழுமையாக வரவேற்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் நாட்டின் கடன் நிலை நிலைபேறான தன்மையில் பேணப்படும்.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை. தற்போதைய வாழ்க்கை செலவுகள் ஒட்டுமொத்த தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் பாரம்பரிய அரசியல் முறைமைகள் மற்றும் அடிப்படை கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்க முடியாது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையுமே தவிர குறைவடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதால் அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது - என்றார்.

# வவுனியா மருத்துவமனை சிற்றூழியர்கள் போராட்டம்



வவுனியா, மார்ச் 04

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைளை முன் வைத்து நேற்று மதியம் 12.30 மணியளவில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "முறையற்ற வரி அதி கரிப்பை நிறுத்து", "முறையற்ற நியமனத்தை வழங்குவதை நிறுத்து", "வாழ்வாதாரத்தை அதிகரி , வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தை குறை" , "ஊழியர் பற்றாக் குறையை உடன் நிவர்த்தி செய்", போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மருத்துவமனையின் நுழைவாயில் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஐ)

கடலட்டைப் பண்ணைகள் மூலம் 7ஆயிரத்து 700 மில்லியன் டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது" என்று கடற்றொழில் அமைச்சர் என்.கே. டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என நேற்று வெளியான செய்தியில் '7ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய்' வருமானமாகக் கிடைத்தது என்பதே சரியானது.

- ஆசிரியர்.

## தேர்தலை...

திகதியை தேர்தல் ஆணைக்குழு இன்று (நேற்று) தீர்மானிப்பதாக அறிவித்திருந்தது. இருந்தபோதும் தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பது தெளிவாக தெரிகிறது.

வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் அபாயத்தில் நாம் இருக்கிறோம். வரையறைகளை அமைத்து, அதற்கமைய மீண்டும் வேட்புமனு கோருவதற்கே அதிக வாய்ப்பு காணப்படுகிறது. அத்தோடு இதனுடன் இணைந்ததாகவே தேர்தல் மீளாய்வுக் குழு இருக்கிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் பல மாதங்கள் அல்லது ஒரு வருடமேனும் பிற்போடப்படும் அவதான நிலையே இருக்கிறது.

என்றாலும், இந்த இரண்டு குழுக்களையும் இணைக்கும் முயற்சியிலேயே நாங்கள் இருக்கிறோம். தொகுதிகள் குறைவடைவது சாதகமாக இருந்தாலும், இதன் காரணமாக இந்த தேர்தல் கால வரையறை இல்லாமல் போகும் நிலை இருக்கிறது. இது பாரதூரமான விடயம்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலை திகதியின்றி ஒத்திவைப்பதற்கும் அவர்கள் எதிர்பார்க்கும் தேர்தல் வரும் வரை இந்த தேர்தலை பிற்போடுவதற்குமே அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் மோசமான முறையில் தலையீடு செய்துவரும் நிலையே தற்போது இருக்கிறது. அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றால் அரசாங்கத்துக்கு தோல்வி ஏற்படும் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டியதில்லை.

தேர்தலில் அரசாங்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், அதனால் அரசாங்கத்தை கொண்டு செல்வதற்கு எந்த தடையும் இதன் மூலம் ஏற்படப் போவதில்லை.

என்றாலும், தேர்தல் பெறுபேறுகள் எதுவாக இருந்தாலும், அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமையை பயன்படுத்துவதற்கு இடமளிக்காவிட்டால், இதனால் ஏற்படும் பெறுபேறு இதனை விட மோசமானதாக இருக்கும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்களின் நிலைப்பாட்டை அமைச்சரவையின் தீர்மானம் மூலம் கட்டுப்படுத்த முடியும் என அரசாங்கம் நினைக்குமாயின், அது அரசாங்கத்தின் முட்டாள்தனமாகும் - என்றார். (ஐ)

## தேர்தலுக்காக...

அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று கோரி ரஞ்சித் மத்தும பண்டார இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எங்களை...

தொழிலை நிறுத்த வேண்டும். அதனை நிறுத்தி இரு வருடங்களுக்கு பின்னர், நாட்டுப் படகுகளில் இலங்கை கடல்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கலாம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேலும், இழுவைமடித் தொழிலை தடை செய்யுமாறு வலியுறுத்தி இந்திய துணைத் தூதரகத்தையும் கடற்றொழில் அமைச்சையும் முடக்கிப் போராட்டத்தை மேற்கொள்வோம் என்றும் மீனவர்கள் கூறினர்.

நேற்றைய தினம் இலங்கை - இந்திய மீனவர் பிரதிநிதிகள் இடையிலான நல்லெண்ண பேச்சு நேற்று கச்சதீவில் நடைபெற்றது. கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தப் பேச்சு நடைபெற்றது. இதில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் பிரதிநிதிகளும் யாழ். மாவட்ட கடற்றொழில் சம்மேளனங்களின் சமாசத் தலைவரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக கட்சியின் தமிழ்நாடு கடற்றொழிலாளர்களின் தலைவரான எம். சி. முனுசாமி தலைமையிலான மீனவர் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

வடக்கு மீனவர் பிரதிநிதிகளின் கண்ணீர் கோரிக்கையை தொடர்ந்து கருத்து வெளியிட்ட இந்திய மீனவர் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில இழுவை மடித் தொழிலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இழுவைமடித் தொழிலில் யாரும் ஈடுபடுவதில்லை. காரைக்காலில் மட்டுமே இழுவை மடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடனும் விரைவில் - ஒரு வாரத்துக்குள் முடிவு ஒன்றை அறிவிக்கிறோம் என்று இந்திய மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(ஐ - 03)

ஈழநாடு
Eelanadu

# நாட்டுக்கு குறுகிய காலம் சண்டை நிறுத்தம் தேவை

## வலியுறுத்துகிறார் கரு ஜயசூரிய



**கொழும்பு, மார்ச் 04**

**நாட்டுக்கு குறுகிய காலம் சண்டை நிறுத்தம் தேவை என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் பங்களிக்காமல் இருப்பது அனைவரின் முழுமையான பொறுப்பு என்று சமூக நீதிக்கான தேசிய இயக்க தலைவர் கரு ஜயசூரிய கோரியுள்ளார் .

மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானித்த போதிலும் எடுக்கவேண்டிய சில அடிப்படைத் தீர்மானங்களை பாராளுமன்றம் எடுக்கத் தவறியுள்ளது.

இது குறித்து தான் மிகவும் அதிருப்தியடைவதாக கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022-2024 காலப்பகுதியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நான்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்கள் மற்றும் பொது தேர்தல்கள் என்பனவே நடத்தப்படவேண்டியுள்ளன. எனினும் ஒரு நாடு என்ற ரீதியில் தீர்க்கப்படவேண்டிய பல பிரச்னைகளுக்கு விடை காணப்படவில்லை.

இதுவரை திட்டமிட்டபடி நடத்தப்படாத மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய சில அடிப்படை முடிவுகளை எடுப்பதற்காக, 2022ஆம் ஆண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது இன்னும் தேவையான முடிவுகளை எடுக்க முடியவில்லை.

இது போன்ற பல பொறுப்புகள் நாடாளுமன்றத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதை அழுத்தமாகச் சொல்ல வேண்டும்.

இவ்வாறான நிலையிலும் கூட, இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகளை காண வேண்டிய அவசியம் உள்ளது.

இதன்படி, தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தை புறக்கணிப்பதன் மூலமோ அல்லது நாட்டை முடக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமோ எந்தவொரு தீர்வையும் காண முடியாது.

அனைத்து சவால்களையும் ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் வெல்லவேண்டும்.

அத்துடன் இன்று நாம் எதிர்நோக்கும் பல பிரச்னைகளை உருவாக்குவதற்கு அடித்தளமிட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே பெரும்பான்மையான சமூகத்தினரின் கருத்தாகும். அதற்காக சூழலைத் தயாரிக்கும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் நிலவும் ஊழலைக் கையாள்வதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பெரும் செல்வத்தை மீட்கும் பொறுப்பும் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே ஒட்டுமொத்த தேசமும் விரும்பும் அந்த இலக்கை அடைய, ஒன்றுபட வேண்டும். குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கா வது அனைவரும் கூட்டாகச் செயல்பட வேண்டும் எந்தவொரு செயலுக்கும் பங்களிக்காமல் இருப்பது ஒரு முழுமையான பொறுப்பாக கருதப்பட வேண்டும் - என்றார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் அடிக்கடி இரத்தத்துக்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதி வழங்கல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், அந்த அதிகரிப்புக்கு ஏற்ப குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை எனவும் இதனால் இரத்த வங்கியில் அடிக்கடி இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியவில்லை என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 28ஆம் திகதி 49 சேகரிப்பும் , 49 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. முதலாம் திகதி 17 சேகரிப்பும் 48 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. 2ஆம் திகதி 33 சேகரிப்பும் 39 வழங்கலும் இடம்பெற்றுள்ளது.

குறித்த புள்ளி விவரத்தின் படி சேகரிப்பை விட வழங்கல் கூடுதலாக காணப்படுகின்றது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே இரத்த தானம் செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இரத்த தானம் செய்பவர்கள் மற்றும் இரத்த தான முகாம்களை ஒழுங்கமைப்பவர்கள் தமது 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். (அ)

# தேர்தலை நடத்துமாறு கேட்டு யாழ்ப்பாணத்தில் போராட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 04

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 10. 30 மணியளவில் அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மின் கட்டண உயர்வை உடன் நிறுத்து, பொருட்களின் விலையை குறை, உள்ளூராட்சித் தேர்தலை உடன் நிறுத்து, வடபகுதி கடல் வளத்தை இந்தியாவுக்கு விற்காதே, உழைக்கும் மக்களை சுரண்டாதே என பல்வேறு கோசங்களை போராட்டத்தின்போது எழுப்பினர். (அ)

# தலைமன்னார் கடற்கரையிலிருந்து படகு மூலம் கச்சதீவு செல்ல நீண்ட நேரம் காத்திருந்த மக்கள்!

மன்னார், மார்ச் 04

தலைமன்னார் கடற்பரப்பில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்குச் செல்வதற்கு பக்தர்கள் தயாராக இருந்தபோதிலும் உரிய நேரத்துக்கு கடற்படை மக்களை பயணிக்க அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் மக்கள் காலை முதல் காத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக குழந்தைகள், வயோதிபர்கள் என பலர் காத்திருந்தனர் எனக் கூறப்பட்டது.

கடற்படையினரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்களைக் காலையில் சமர்ப்பித்த அந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டபோதும் கடலில் படகில் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

கடந்த காலங்களில் நேரத்துடன் மக்கள் பதிவுகளை மேற்கொண்டு கச்சதீவு செல்ல அனுமதி வழங்கப்பட்டு வந்தது.



ஆனால் நேற்று உரிய நேரத்திற்கு செல்வதற்கு அனுமதிக்காமையினால் நீண்ட நேரம் கடும் வெயிலில் காத்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதோடு பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு அசௌகரிங்களுக்கு முகம் கொடுத்தனர் எனவும் கூறப்பட்டது. (அ)

# மரதன் ஓட்டத்துக்கு மாணவர்களை ஏற்றிச்சென்ற கப் வாகனம் விபத்து!

## பளையில் 11 மாணவர்கள் காயம்

கிளிநொச்சி, மார்ச் 04

இயக்கச்சிப் பகுதியிலிருந்து பளை நோக்கி மாணவர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த கப் வாகனம் விபத்துக்குள்ளானதில் 11 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி இடம்பெற்று வரும் நிலையில் மரதன் ஓட்டப் போட்டிக்காக மாணவர்களை ஏற்றிச்சென்ற வாகனமே நேற்று காலை 6 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இயக்கச்சி பகுதியிலிருந்து பளை நோக்கி மாணவர்களை மரதன் ஓட்டத்திற்காக ஆரம்ப இடத்துக்கு ஏற்றிச் சென்ற குறித்த கப் வாகனம் புதுக்காட்டுச் சந்தியை அண்மித்து ஏ-9 வீதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

இதன்போது குறித்த வாகனத்தின் பின்னால் அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கூடாரம் வாகனத்தை விட்டு அகன்றபோது மாணவர்களும் வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகினர்.

இதன்போது வாகனத்தில் பயணித்த 11 பேர் காயமடைந்தனர்.

விபத்தில் காயமடைந்த 11 மாணவர்களும் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன், மேலும் ஒருவர் பளை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த வாகனத்தை செலுத்திய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் இம்மாத இறுதிக்குள் நியமிக்கப்படுவர்

கொழும்பு, மார்ச் 04

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களின் நியமனங்களை இம்மாத இறுதிக்குள் இறுதி செய்வதற்கு அரசியலமைப்புச் பேரவை திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான விண்ணப்பங்களை கோர அரசியலமைப்பு பேரவை அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய தேர்தல் ஆணைக்குழு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, பொது சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, தேசிய தணிக்கை சேவைகள் ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்கான நியமனம் இம்மாத இறுதிக்குள் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனம் இம்மாத இறுதிக்குள் இறுதி செய்யப்படும் என கூறப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.